# தின பூமி

thinaboomi.com

கோவை, வியாழன், ஜூன் 30, 2022 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00



உலகம்

நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் வழங்கும் மசோதா: இலங்கை அமைச்சரவை ஒப்புதல்

பக்கம் 2





இந்தியா

தீவிரவாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது: உதய்பூர் படுகொலைக்கு, மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி கண்டனம்

பக்கம் 3





விளையாட்டு

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்: ரோகித் சர்மா விலகியதை அடுத்து கேப்டனாக ஜஸ்ப்ரிட் பும்ரா நியமனம்

பக்கம் 7




### ஜனாதிபதி தேர்தலில் ஆதரவுகோரி

## முதல்வர் ஸ்டாலினை இன்று சந்திக்கிறார் யஷ்வந்த் சின்கா

திருவனந்தபுரம், ஜூன் 30-

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடும் யஷ்வந்த் சின்கா வாக்கு சேகரிப்பதற்காக திருவனந்தபுரம் வந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலினை இன்று சந்தித்து வாக்கு சேகரிக்கிறார்.

ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் 18ம் தேதி நடைபெறுகிறது. பாஜக கூட்டணி வேட்பாளராக திரெளபதி முர்முவும், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்காவும் போட்டியிடுகின்றனர். 2 வேட்பாளர்களும் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டனர். வேட்புமனு தாக்கல் செய்ய நேற்று கடைசி நாளாகும். இந்த நிலையில் எதிர்க்கட்சி வேட்பாளர் யஷ்வந்த் சின்கா நேற்று முதல் தென் மாநிலங்களில் வாக்கு சேகரிப்பை தொடங்கினார். இதற்காக நேற்று முன்தினம் இரவு விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்தார். விமானநிலையத்தில் அவரை கேரள சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் ராஜீவ் வரவேற்றார்.

நேற்று அவர் முதல்வர் பினராய் விஜயன், அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இன்று யஷ்வந்த் சின்கா சென்னை வருகிறார். அவர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் எம்எல்ஏக்களை சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் தனக்கு ஆதரவு அளிக்கும்படி கோருகிறார்.




● திருப்பத்தூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில், 16,820 பயனாளிகளுக்கு 103 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர்ஆனந்த், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கலெக்டர் அமர்குஷ்வாஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## டி.என்.பி.எஸ்.சி - குரூப் - 1 தேர்வு முடிவுகள் வெளியீடு

சென்னை, ஜூன் 30-

குரூப் 1 தேர்வு முடிவுகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற குரூப் 1 முதன்மைத் தேர்வுக்கான முடிவுகள் டி.என்.பி.எஸ்.சி. இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் தேர்வு பதிவெண்கள் தேர்வாணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் https://www.tnpsc.gov.in/english/latest-results.aspx வெளியாகியிருக்கிறது. கடந்த மார்ச் 4- ம் தேதி முதல் 6-ம் தேதி வரை, குரூப் 1 பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு நடைபெற்றது. இந்த எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் வரும் ஜூலை 13, 14, 15 ஆகிய தேதிகளில் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தேர்வாணையம் தெரிவித்துள்ளது. எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் சென்னையிலுள்ள டி.என்.பி.எஸ்.சி. அலுவலகத்தில் நடைபெறும் நேர்காணலில் பங்கேற்க அழைக்கப்படுவார்கள்.

இது தொடர்பாக தனிப்பட்ட முறையில் தேர்வர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல்கள் தெரிவிக்கப்பட மாட்டாது. அனைத்து விவரங்களும் டி.என்.பி.எஸ்.சி. இணையதளத்திலேயே பகிரப்படும். அதுபோல, குறுந்தகவல் அல்லது மின்னஞ்சல் மூலம் தேர்வர்களுக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

### மகாராஷ்டிராவில் இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில்

# முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார் உத்தவ் தாக்கரே

### அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் விரும்பியதை கொடுத்துள்ளதாக விளக்கம்

மும்பை, ஜூன் 30-

மகாராஷ்டிராவில் சிவ சேனா தலைமையிலான கூட்டணி அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ள நிலையில் மகாராஷ்டிர மாநில முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாக உத்தவ் தாக்கரே அறிவித்துள்ளார். மேலும், அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் விரும்பியதை தான் கொடுத்துள்ளதாக விளக்கமளித்துள்ளார்.

**கூட்டணி ஆட்சி...**

மகாராஷ்டிர மாநிலத்தில் உத்தவ் தாக்கரே தலைமையில் சிவசேனா - காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது. அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள சிவசேனாவை சேர்ந்த ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான எம்எல்ஏக்கள், அசாமில் முகாமிட்டுள்ளனர். சிவசேனாவை சேர்ந்த 39 அதிருப்தி எம்எல்ஏக்கள் உட்பட மொத்தம் 48 எம்எல்ஏக்கள், ஏக்நாத் ஷிண்டே அணியில் இருப்பதாக கூறப்படுகிறது.

**பெரும்பான்மையை...**

இதனிடையே, டெல்லி சென்றிருந்த முன்னாள் முதலமைச்சரும், பாஜக மூத்த தலைவருமான தேவேந்திர பட்னாவிஸ் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஸ், 39 சிவசேனா எம்எல்ஏ-க்கள் தற்போதைய கூட்டணி அரசுடன் இருக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளதால், அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டதாக தெரிவித்தார். எனவே, சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு முதலமைச்சருக்கு கவர்னர் உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**சிறப்பு கூட்டத்திற்கு...**

இந்நிலையில், மகாராஷ்டிர சட்டப்பேரவையில் இன்று சிறப்பு கூட்டத்திற்கு அம்மாநில கவர்னர் பகத்சிங் கோஷியாரி அழைப்பு விடுத்துள்ளார். இதில் உத்தவ் தாக்ரே தலைமையிலான அரசு பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார். இன்று மாலை 5 மணிக்குள் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. வாக்கெடுப்பு முழுமையாக வீடியோ பதிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**சுப்ரீம் கோர்ட்டில் மனு**

இதற்கிடையில் சிவசேனா சார்பில் கவர்னர் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த உத்தரவிட்டுள்ளதற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 16 எம்.எல்.ஏ.,க்கள் தகுதிநீக்க விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது கவர்னர் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆணை பிறப்பித்துள்ளது சட்ட விரோதமானது என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நடத்த தடையில்லை...**

இந்த மனு, சுப்ரீம் கோர்ட்டின் விடுமுறை கால அமர்வான நீதிபதிகள் சூரியகாந்த், பர்திவாலா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அதிருப்தி குழுவின் தலைவர் ஏக்நாத் ஷிண்டே சார்பில் மூத்த வழக்கறிஞர் என்.கே.கவுல் ஆஜராகி வாதாடினார். அனைத்து தரப்பு வாதங்களை கேட்டபிறகு நீதிபதிகள் தெரிவிக்கையில்., மகாராஷ்டிராவில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த கவர்னர் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று தீர்ப்பளித்தனர். கவர்னரின் உத்தரவுப்படி மகாராஷ்டிரா சட்டப்பேரவையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த தடையில்லை என்றும் உத்தவ் தாக்கரே அரசு சட்டப்பேரவையில் இன்று பெரும்பான்மை நிரூபிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

(கடைசி பக்கம் பார்க்க)

### திருப்பத்தூர் மாவட்டத்தில் அரசு விழா:

## ரூ.13.66 கோடியில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார் முதல்வர் ஸ்டாலின்

திருப்பத்தூர், ஜூன் 30-

திருப்பத்தூர் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் புதிதாக கட்டப்பட்டுள்ள திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகம் உள்ளிட்ட ரூ.129 கோடியே 56 லட்சம் செலவில் முடிவுற்ற 28 திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.13 கோடியே 66 லட்சம் மதிப்பீட்டிலான 6 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 16,820 பயனாளிகளுக்கு ரூ.103 கோடியே 42 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

திருப்பத்தூர், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிட முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு (28.6.2022) திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் சென்றார். அதனைத் தொடர்ந்து நேற்று காலை திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

**கலெக்டர் அலுவலக வளாகம்**

திருப்பத்தூர் நகரத்தில் ரூ. 109.71 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தை முதல்வர் திறந்து வைத்து பார்வையிட்டார். இப்புதிய மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகம் 10.38 ஏக்கர் பரப்பளவு பகுதியில் 2,94,565 சதுரஅடி கட்டடப் பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 129 கோடியே 56 லட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 28 பணிகளை முதல்வர் திறந்து வைத்தார். அதை தொடர்ந்து 13 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 6 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார். மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் 16,820 பயனாளிகளுக்கு 103 கோடியே 42 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் தேவராஜி, நல்லதம்பி, வில்வநாதன், அமுலு விஜயன், எம்.பி. கிரி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தயானந்த் கட்டாரியா, திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் அமர் குஷ்வாஹா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பள்ளி வாகனங்களில் கேமரா, எச்சரிக்கை கருவி கட்டாயம்

### தமிழக அரசு உத்தரவு

சென்னை,ஜூன் 30-

தமிழகத்திலுள்ள பள்ளி வாகனங்களில் கண்காணிப்பு கேமரா, எச்சரிக்கை சென்சார் கருவி போன்றவற்றை கட்டாயம் பொருத்த வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

பள்ளி வாகனங்களின் முன்பக்கமும், பின்பக்கமும் தலா ஒரு கேமரா கட்டாயம் பொருத்த வேண்டும் என்றும், பின்புறமும் சென்சார் கருவியை வைக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை பள்ளி நிர்வாகமே பேருந்தில் அழைத்துச் சென்று மீண்டும் வீடுகளுக்கு கொண்டு சென்று விடுகிறது.

விபத்துக்களை தடுக்க இந்த வாகனங்களின் தரம் குறித்து மாவட்ட கல்வி அலுவலகர்களும், மோட்டார் வாகன ஆய்வாளர்களும் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், தமிழகத்திலுள்ள பள்ளி வாகனங்களில் கண்காணிப்பு கேமரா, எச்சரிக்கை சென்சார் கருவி போன்றவற்றை கட்டாயம் பொருத்த வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

## அஞ்சல் சேவைக்கும் இனி ஜி.எஸ்.டி: 47-வது கவுன்சில் கூட்டத்தில் முடிவு

சண்டிகர், ஜூன் 30-

அஞ்சலக சேவைகளுக்கும் ஜி.எஸ்.டி வசூலிக்கப்படவுள்ளது. சில்லறை விற்பனை பொருள்களுக்கு ஜி.எஸ்.டி வரியை உயர்த்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.டி கவுன்சிலின் 47-வது கூட்டம், சண்டீகரில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் இரு அமர்வுகளாக நடைபெறறது. இரண்டாவது நாளான நேற்று, சில்லறை விற்பனை பொருள்களின் வரி உயர்த்தப்பட்டுள்ளது. அஞ்சலக சேவைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.டி வரி விலக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது. அதன்படி இனி அஞ்சல் சேவைகளுக்கும் ஜி.எஸ்.டி வசூலிக்கப்படவுள்ளது.

ரூ.1000-க்கும் குறைவான உணவக அறை வாடகைக்கு 12 சதவீதம் ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படவுள்ளது. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்காக ஒப்புதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படவுள்ளது. சூரிய சக்தி வாட்டர் ஹீட்டர்கள், பதப்படுத்தப்பட்ட தோல்களுக்கான ஜி.எஸ்.டி 5 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மோட்டார் பம்புகள், பால் பண்ணை இயந்திரங்களுக்கான வரி 12 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எல்.இ.டி. விளக்குகள், பேனா மை, கத்தி, பிளேடுகளுக்கு 12 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக வரி உயர்த்தப்பட்டுள்ளது. வணிக பெயரில் அல்லாத பாக்கெட்டில் அடைத்து விற்கப்படும் அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவு பொருள்களுக்கு ஜி.எஸ்.டி 5 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.

## ஆகஸ்ட் மாதம் 6-ம் தேதி துணை ஜனாதிபதி தேர்தல்

### தலைமை தேர்தல் ஆணையம் அறிவிப்பு

புதுடெல்லி, ஜூன் 30-

துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவின் பதவிக்காலம் நிறைவடைய உள்ள நிலையில் அப்பதவிக்கான தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

குடியரசு துணைத் தலைவராக உள்ள வெங்கையா நாயுடுவின் பதவிக்காலம் ஆகஸ்ட் 10ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ள நிலையில் நாட்டின் 16-வது துணை ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான அறிவிப்பை இந்திய தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டுள்ளது.அதன்படி ஆகஸ்ட் 6-ம் தேதி துணை ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 5-ம் தேதி மனுத்தாக்கல் தொடங்கும் எனவும் வேட்பாளர்கள் வேட்புமனுவைத் தாக்கல் செய்ய ஜூலை 19-ம் தேதி கடைசி நாள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜூலை 20-ம் தேதி வேட்புமனு மீது பரிசீலனை நடைபெறும் எனவும் வேட்புமனுக்களைத் திரும்பப் பெற ஜூலை 22 கடைசி தினம் எனவும் இந்தியத்

(கடைசி பக்கம் பார்க்க)


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -150.48 | -51.10 |
| பாயின்ட் 53026.97 | பாயின்ட் 15799.1 |



**தங்கம்**
1 சவரன் ₹ 37,464
1 கிராம் ₹ 4,683



**வெள்ளி**
1 கிலோ ₹ 65,300
1 கிராம் ₹ 65.30



**டாலர்** ₹ 78.99

**பெட்ரோல்** ₹ 102.63
**டீசல்** ₹ 94.24



# நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் வழங்கும் மசோதா

## இலங்கை அமைச்சரவை ஒப்புதல்

**கொழும்பு, ஜூன் 30-**

இலங்கை நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் வழங்கும் அரசியல் சாசன சட்டத் திருத்த வரைவு மசோதாவுக்கு, அந்நாட்டு அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2015-ல், இலங்கையின் அப்போதைய பிரதமர் ரனில் விக்ரமசிங்கே, நாடாளுமன்ற அதிகார வரம்பிற்குள் அதிபரை கொண்டு வரும் வகையில், அரசியல் சாசனத்தில் சட்டத் திருத்தத்தை செய்தார். இந்த சட்டத்தை, 2020-ல் அதிபர் கோத்தபய ராஜபச்சே ரத்து செய்து, அதிபருக்கு அதிக அதிகாரம் வழங்கும் சட்டத்தை அமல்படுத்தினார். இந்நிலையில், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வரலாறு காணாத நெருக்கடிக்கு, அதிபர் கோத்தபய ராஜபக்சே தான் காரணம் எனக் கூறி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதையடுத்து, அதிபரின் அதிகாரத்தை குறைத்து, அவரை நாடாளுமன்றத்தின் கீழ் செயல்பட வைக்கும் அரசியல் சாசனத்தின், 21-வது சட்டத் திருத்த மசோதாவை எதிர்க்கட்சியான சமாகி ஜனா பாலவேகயா தாக்கல் செய்தது. இந்த மசோதா சட்ட வடிவம் பெறுவதற்கு முன், பொது வாக்கெடுப்பு நடத்த, இலங்கை சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. இந்நிலையில், அரசியல் சாசனத்தின் 22-வது சட்டத் திருத்த வரைவு மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது.

அதிபரை நாடாளுமன்றத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அதிகாரத்தை வழங்கும் இந்த வரைவு மசோதாவுக்கு, மந்திரிசபை குழு ஒப்புதல் அளித்துள்ளதாக, செய்தி தொடர்பாளர் பண்டுலா குணவர்த்தனா தெரிவித்து உள்ளார்.

இந்த மசோதா விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக அவர் கூறினார்.

# பெண்ணாக புடின் இருந்திருந்தால் போரில் இறங்கியிருக்கவே மாட்டார்

## பிரிட்டன் பிரதமர் சொல்கிறார்

**லண்டன், ஜூன் 30-**

ரஷ்ய அதிபர் புடின் ஒரு பெண்ணாக இருந்திருந்தால், அவர் போரில் இறங்கியிருக்க மாட்டார் என இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் கூறியதாவது:-

புடின் ஒரு பெண்ணாக இருந்திருந்தால், பைத்தியக்காரத்தனமான, ஆடம்பரமான படையெடுப்பு மற்றும் வன்முறைப் போரில் அவர் ஈடுபட்டிருப்பார் என்று நான் நினைக்கவில்லை. புடினின் உக்ரைன் படையெடுப்பு நச்சு ஆண்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு சிறந்த கல்வி மற்றும் அதிகாரப் பதவிகளில் அதிக பங்கு அளிக்க வேண்டும்.

நிச்சயமாக மக்கள் போர் முடிவுக்கு வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் இப்போதைக்கு அது நடக்க வாய்ப்பில்லை. எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை . புடின் எந்த சமாதானத்தையும் முன்வைக்கவில்லை என்று கூறினார்.

## ஈரோடு கருமுட்டை விவகாரம்:

# சிறுமி தற்கொலைக்கு முயன்றதால் பரபரப்பு

**ஈரோடு, ஜூன் 30-**

ஈரோடு கருமுட்டை விற்பனை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி தற்கொலைக்கு முயன்றதால் பரபரப்பு நிலவியது.

ஈரோடு மற்றும் பெருந்துறையில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் செயற்கை கருவூட்டலுக்காக 16 வயது சிறுமியின் கருமுட்டைகள் தானமாக பெறப்பட்டதாகவும், சட்டத்துக்குப் புறம்பாக இந்த கருமுட்டை விற்பனை நடந்ததாகவும் புகார்கள் வந்தன.

இது தொடர்பாக சிறுமியின் தாய், அவரது 2வது கணவர், தரகர் மற்றும் போலி ஆதார் அட்டை வழங்கியவர் என 4 பேரை போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து பல கட்ட விசாரணைகள் நடந்து வருகிறது. அரசு சார்பில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை சார்பிலும் மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி அரசு காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், கருமுட்டை விற்பனை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி அரசு காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் புதன்கிழமை தற்கொலைக்கு முயன்றதால் பரபரப்பு நிலவியது. அரசு காப்பகத்தின் பாத்ரூம் சுத்தம் செய்யும் ரசாயனத்தை குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதையடுத்து சிறுமி ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 27 ஆண்டுகளாக விடுமுறை எடுக்காமல் பணியாற்றிய

# தந்தைக்கு ரூ. ஒரு கோடி நிதி திரட்டிய அன்பு மகள்

**லாஸ்வேகாஸ், ஜூன் 30-**

அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் மெக்கரன் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பர்கர் கிங்கில் சமையல்காரராகவும், காசாளராகவும் 27 ஆண்டுகளாக ஒரு நாள் தவறாமல் கெவின் போர்டு என்பவர் பணியாற்றியுள்ளார்.

கெவின் போர்டின் மகள் செரினா, தனது தந்தைக்காக ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணி, தன் தந்தை 27 வருடங்களில் ஒரு நாள் கூட விடுமுறை எடுக்காமல் சென்றார் என்ற விஷயத்தை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார்.

அவரது மகள் வெளியிட்ட பதிவை பார்த்த நெட்டிசன்கள் பலர் போட்டி போட்டுக் கொண்டு கெவின் போர்டுக்கு பணத்தை அள்ளி வழங்கினர்.

கோ-பண்ட்-மீ என்ற அமைப்பின் மூலம் செரினா இந்த தொகையை திரட்டினார். இவர்களை தொடர்ந்து, பிரபல நகைச்சுவை நடிகர் டேவிட் ஸ்பேட் என்பவர் 5000 டாலர் பணம் கொடுத்ததாக தெரிகிறது.

கெவின் போர்டின் சேவையைப் பாராட்டி நெட்டிசன்கள் தாராளமாக நன்கொடை அளித்ததில் ரூ. ஒரு கோடி வரை சேர்ந்து விட்டதை கண்டு அதிர்ச்சியடைந்த மகள் செரினா மிகுந்த உணர்ச்சிவசப்பட்டார்.

அவருடைய 27 வருடங்களில் ஒரு நாள் கூட லீவு போடாமல் சென்றதற்கு அவரது நிறுவனம் ஒரு சிறிய பரிசு கொடுத்த நிலையில், நெட்டிசன்கள் அவரது உழைப்பை பாராட்டி ரூ. ஒரு கோடிக்கும் மேல் நிதி திரட்டப்பட்டுள்ள சம்பவம் காண்போரை ஆசிரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

# மீனாவின் கணவர் இறப்புக்கு கொரோனா காரணம் அல்ல

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்

**சென்னை, ஜூன் 30-**

2 உறுப்புகள் செயலிழந்து, 95 நாட்கள் எக்மோ உதவியுடன் சிகிச்சை பெற்று உடல் உறுப்பு கிடைக்காமல் தான் நடிகை மீனாவின் கணவர் மரணம் அடைந்தார். இதனை மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உறுதிபடுத்தினார். அவரது மரணத்திற்கு கொரோனா தொற்று காரணமல்ல என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகர் நேற்று முன்தினம் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் மரணம் அடைந்தார். இந்நிலையில், அவரது உடல் நிலை தொடர்பாகவும், அவர் கொரோனா தொற்று காரணமாகவே மரணம் அடைந்து விட்டதாகவும் தகவல் பரவி வருகிறது. ஆனால், அவர் உடல் உறுப்பு கிடைக்காமல்தான் மரணம் அடைந்ததாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நடிகை மீனாவின் கணவருக்கு டிசம்பர் மாதம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்த கொரோனா பாதிப்பால் அவரது நுரையீரல் அதிக அளவு பாதிக்கப்பட்டது. அவர் கொரோனாவில் இருந்து மீண்டாலும் அவரின் நுரையீரல் பாதிப்பை சரி செய்ய முடியவில்லை. இதன் காரணமாக அவர் தொடர்ந்து வீட்டில் சிகிச்சை பெற்று வந்தார். நுரையீரல் பாதிப்பு காரணமாக ஆக்சிஜன் உதவியுடன் சிகிச்சை பெற்றுவந்தார்.

இதற்கிடையில், அவரின் இரண்டு உறுப்புகள் செயலிழந்துவிட்டன. இதனைத் தொடர்ந்து உறுப்பு அறுவை சிகிச்சை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு உடல் உறுப்பு தானம் பெறவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் உரிய நேரத்தில் உடல் உறுப்பு கிடைக்கவில்லை. இந்நிலையில், சிகிச்சை பலன் இன்றி அவர் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

இது தொடர்பாக மருத்துவதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் கேட்டபோது, "நேற்றைக்கு முன்தினம் கொரோனா தொற்று ஏற்பட்டு அவர் மரணம் அடைந்து விட்டது போல் தகவல் பரவி வருகிறது. இது தவறானது. அவருக்கு டிசம்பர் மாதமே கொரோனா தொற்று ஏற்பட்டது. அப்போது அவருக்கு தீவிர நுரையீரல் பாதிப்பு இருந்தது. அவர் வீட்டில் ஆக்சிஜன் உதவியுடன்தான் சிகிச்சை பெற்று வந்தார்.

அதன்பிறகு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கடந்த ஆறு மாதம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த சிகிச்சையின் போது அவருக்கு இருதயம் மற்றும் நுரையீரல் ஆகிய உறுப்புகள் செயலிழந்துவிட்டது. 95 நாட்கள் எக்மோ சிகிச்சையில் இருந்தார்.

15 நாட்களுக்கு முன்னால் நான் அவரை மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்போது சுய நினைவு இல்லாமல் இருந்தார். அவருக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தியா முழுவதும் கோரப்பட்டு அவரின் ரத்தம் உள்ள உறுப்பு கிடைத்தால் அவருக்கு முன்னுரிமை அளித்து உறுப்பு மாற்று சிகிச்சை செய்ய முதலமைச்சரின் அறிவுறுத்தலோடு பல விதமான முயற்சிகள் மேற்கொண்டோம்.

மகாராஷ்டிரா, பெங்களூரு உள்ளிட்ட அனைத்து இடங்களில் சொல்லி வைத்து இருந்தோம். ஆனால் அவரின் ரத்த வகையை சேர்ந்த உறுப்பு கிடைக்கவில்லை. ரத்த வகை ஒன்றாக இருக்க வேண்டும். ஒன்றாக உள்ள இரண்டு உறுப்புகளும் கிடைக்கவில்லை. எனவே அவர் தற்போது கொரோனா தொற்று பாதிக்கப்பட்டு மரணம் அடையவில்லை" என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# கனடாவில் வங்கிக்குள் ஆயுதங்களுடன் புகுந்த 2 மர்ம நபர்கள் சுட்டுக்கொலை

**ஒட்டாவா, ஜூன் 30-**

கனடாவில் வங்கிக்குள் ஆயுதங்களுடன் புகுந்த 2 மர்ம நபர்களை போலீசார் சுட்டுக் கொன்றனர்.

கனடா நாட்டில் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் அமெரிக்கா எல்லை அருகே வான்கூவர் தீவில் இருக்கும் சானிச்சில் ஒரு வங்கி இயங்கி வருகிறது. இந்த வங்கியில் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் இருந்தனர். திடீரென 2 பேர் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் புகுந்தனர். அங்கிருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தகவலறிந்து போலீசார், வங்கிக்கு விரைந்து வந்து அப்பகுதியை சுற்றி வளைத்தனர். அப்போது 2 மர்ம நபர்களுக்கும், போலீசாருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் மர்ம நபர்கள், 2 பேரை போலீசார் சுட்டுக் கொன்றனர். மேலும் 6 போலீசார் படுகாயமடைந்தனர்.

இதற்கிடையே மர்ம நபர்கள் வந்த வாகனத்தை சோதனை செய்த போது அதில் வெடிகுண்டு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து வங்கி அருகே வசிக்கும் பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரி ஒருவர் கூறும் போது,

வங்கியில் புகுந்த கவச உடை அணிந்திருந்த 2 பேர், அதிக ஆயுதங்களை வைத்திருந்தனர். 6 போலீஸ் அதிகாரிகள் படுகாயமடைந்தனர். அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது என்றார். ஆனால் அந்த 2 பேர் பற்றிய எந்த தகவலையும் போலீசார் வெளியிடவில்லை. வங்கியில் கொள்ளையடிக்கும் நோக்கில் புகுந்தார்களா? அல்லது வேறு ஏதேனும் காரணமா என போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ஜப்பானில் 150 ஆண்டுகளில் இல்லாத அளவு வெப்பநிலை

**டோக்கியோ, ஜூன் 30-**

ஜப்பானில் 150 ஆண்டுகள் இல்லாத அளவு வெப்ப அலையின் தாக்கம் பதிவாகியுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தின் காரணமாக வெப்ப அலைகளின் தாக்கம் முன்னெப்போதும் இல்லாத அளவு பதிவாகி வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஜப்பானில் பல்வேறு நகரங்களில் வெப்பநிலையானது உயர்ந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் புதன்கிழமை 37 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. இது கடந்த 150 ஆண்டுகளில் இல்லாத அளவு ஜூன் மாதத்தில் பதிவான அதிகபட்ச வெப்பநிலையாகும். தொடர்ந்து வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை முறையே 36 டிகிரி செல்சியஸ் மற்றும் 35 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

அதிகளவு வெப்பநிலை பதிவாகிவருவது நகரின் மின் தேவையை அதிகரித்துள்ளதாகவும், இதனால் மக்கள் தங்களது மின்பயன்பாட்டை சிக்கனமாக கையாளவும் அந்நாட்டு அரசு வலியுறுத்தியுள்ளது. இதற்காக மாலை 3 மணி முதல் தேவையற்ற விளக்குகளை அணைக்குமாறு அறிவுறுத்தியுள்ள ஜப்பான் அரசு அந்நேரங்களில் குளிர்சாதனக் கருவிகளை மட்டும் பயன்படுத்த வலியுறுத்தியுள்ளது. டோக்கியோவில் அதிகரித்துள்ள வெப்ப அலையின் தாக்கத்தால் இதுவரை 76 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**30-06-2022**




**மேஷம்:-** பணவரவுகள் அதிகரிப்பதால் புதிய உற்சாகம் பிறக்கும். குழந்தைகள்பால் அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்படும். மனைவியின் பணிவிடைகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**ரிஷபம்:-** இன்று சுமாரான நாள். குடும்பத்தாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாது இருப்பது நல்லது. தோல்விகளைக் கண்டு துவளாதீர்கள். முயன்றால் வெற்றி நிச்சியம்.

**மிதுனம்:-** ஆரோக்கியம் மேம்படும். படுக்கை சுகங்கள், நல்ஆடைகள், நண்பர்கள் அருகாமை, நல்அதிர்ஷ்டம் என எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். வருமானம் சேரும் வளம் மிக்க நாள்.

**கடகம்:-** இன்று கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தைக் குறைத்து, விபத்தினைத் தவிர்க்கவும். உறவுகளிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க முயலவும்.

**சிம்மம்:-** பிறருக்கு உதவி புரிவதில் பேரின்பம் அடைவீர்கள். படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பணவரவு மற்றும் பெண்களால் இலாபம் ஏற்பட மனம் மகிழும்.

**கன்னி:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும் நாள். பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**துலாம்:-** இன்று, தெய்வ நம்பிக்கையும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். கோவில் திருப்பணிகள் மற்றும் அன்னதானங்கள செய்ய மனம் விழையும். வாழ்க்கையில் வசந்த காலமென நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** இன்று, அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் பயன் பெறலாம். மனைவியின் கலகத்தால் உறவுகளிடையே உரசல்கள் ஏற்படலாம். பொருள்களை கவனமாகப் பாதுகாத்தால் இழப்பைத் தவிரக்கலாம்.

**தனுசு:-** புதிய தொழில் பயிற்சி மற்றும் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான வரவால் சந்தோஷம் நிலவும்.

**மகரம்:-** அனைத்து நலன்களும் உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து ஏற்றம் தரும். தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் உதவி கிடைக்கும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:-** உங்கள் திறமையை முழுமையாகக் காட்டிச் செயல்பட்டாலும் மேலிடத்தில் திருப்தி இருக்காது. வாகனங்களில் நிதானமாகச் சென்றால் தேவையற்ற விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

**மீனம்:-** வீட்டில் திருட்டைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். தாயின் உடல்நிலையில் அக்கறை தேவை. காரியத்தடைகள் மற்றும் பணயிழப்புகள் ஏற்படலாம்.

## தரம் குறைவு புகார் எதிரொலி:

# மதிய உணவை ருசித்து பார்த்த புதுவை முதல்வர் ரங்கசாமி

**புதுச்சேரி, ஜூன் 30-**

பள்ளிகளுக்கு வழங்கப்படும் உணவு தரமின்றி வழங்கப்படுவதாக எழுந்த புகாரையடுத்து உணவின் மாதிரியை புதுவை முதல்வர் ரங்கசாமி சாப்பிட்டு பார்த்தார்.

புதுச்சேரி பள்ளி கல்வி இயக்ககம், பெங்களூருவை சேர்ந்த அட்சய பாத்ரா அறக்கட்டளையுடன் இணைந்து புதுச்சேரி அரசு பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், புதுச்சேரியில் இயங்கி வரும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 300 பள்ளிகளை சேர்ந்த 50 ஆயிரம் மாணவர்களுக்கு உணவளிக்க திட்டமிட்டனர். இதற்காக லாஸ்பேட்டையில் உள்ள மத்திய உணவு சமையல் கூடம், சில ஆண்டுகளுக்கு முன்பு அட்சய பாத்ரா அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 23-ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு ரொட்டிப் பால், ஊட்டச்சத்து பானம் மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் மதிய உணவை அட்சய பாத்ரா அமைப்பானது, அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனம் மூலம் வழங்கி வருகிறது. தயிர், தக்காளி, சாம்பார் சாதம் என்ற அடிப்படையில் மதியம் சைவ உணவினை அந்த நிறுவனம் வழங்கி வருகிறது. லாஸ்பேட்டையில் உள்ள மத்திய உணவுக்கூடத்தில் இருந்து மதிய உணவு தயார் செய்து அந்தந்த பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தனியார் நிறுவனம் வழங்கும் மதிய உணவில் பூண்டு, வெங்காயம் போன்றவை சேர்க்கப்படாமல் ருசியின்றி வழங்கப்படுவதாக பொது நல ஆமைப்பினர் சிலர் அதிருப்தி தெரிவித்தனர்.

உணவின் தரம் தொடர்பாக பள்ளிகள் தரப்பில் மாணவ, மாணவிகள் கருத்துகளும் பெறப்பட்டன. இந்த நிலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு சட்டசபையில் உள்ள அவரது அலுவலகத்துக்கு எடுத்து வரப்பட்டது. மதிய உணவின் மாதிரியை முதல்வர் ரங்கசாமி சாப்பிட்டு பார்த்தார்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், இனி மாணவ, மாணவிகளுக்கு தரப்படும் மதிய உணவின் மாதிரியை முதல்வர் அலுவலகத்துக்கும் கல்வியமைச்சர் அலுவலகத்துக்கும் அட்சய பாத்ரா அமைப்பினர் அனுப்பி வைக்க வேண்டும். மதிய உணவின் தரத்தை தினமும் சாப்பிட்டு பார்த்து ஆய்வு செய்ய வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தி உள்ளார் என்று தெரிவித்தனர்.

## உதய்பூர் படுகொலை சம்பவம்:

# தப்பியோடிய இருவரை விரட்டி பிடித்து கைது செய்த காவலர்கள்

**உதயபூர், ஜூன் 30-**

உதய்பூரில் டெய்லர் ஒருவரை படுகொலை செய்த இரண்டு நபர்களை போலீஸார் வாகனத்தில் சென்று துரத்திப் பிடித்தனர். இந்தக் காட்சிகள் அடங்கிய வீடியோ இணையத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

அந்த வீடியோவில் பைக்கில் செல்லும் இருவரையும் போலீஸார் ரோந்து வாகனத்தில் விரட்டி மடக்கிப் பிடிக்கின்றனர். காவலர்கள் அவர்கள் இருவரையும் தாக்கி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றனர். பின்னர் மேலும் இரண்டு காவலர்கள் பைக்கில் வர அனைவரும் சேர்ந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கைது செய்கின்றனர்.

உதய்பூரில் டெய்லர் கடை நடத்தி வருபவர் கானியா லால். இவர் தனது சமூகவலைதளங்களில் அடிக்கடி நுபுர் சர்மா பற்றி பதிவுகளைப் பகிர்ந்ததாகத் தெரிகிறது. இதற்காக கானியா லாலுக்கு பலமுறை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கவுஸ் முகமது, ரியாஸ் அட்டாரி ஆகிய இருவரும் துணி தைக்க அளவு கொடுப்பதுபோல் கானியா லாலின் கடைக்குச் சென்றுள்ளனர். அவரும் அட்டாரிக்கு அளவு எடுக்கிறார். அப்போது அட்டாரி தான் மறைத்துவைத்திருந்த பயங்கரமான ஆயுதத்தை எடுத்து கானியாவை தாக்குகிறார். கானியாவின் கழுத்தை அறுத்து கொலை செய்கிறார். இந்தச் சம்பவத்தை முகமது கவுஸ் படம் பிடிக்கிறார்.

பின்னர் இருவரும் சேர்ந்து இறைத்தூதரை அவமதித்தற்கான பாடம் என்று கூறுவதுடன், பிரதமர் மோடிக்கும் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

பின்னர் அந்த இடத்திலிருந்து இருவரும் கிளம்பிவிடுகின்றனர். அவர்கள் எடுத்த வீடியோ பல்வேறு வாட்ஸ் அப் குழுக்களுக்கும் அனுப்பப்பட்டு அங்கிருந்து வைரலாக பரவுகிறது.

# பீகாரில் மின்னல் தாக்கி ஒரே நாளில் 16 பேர் பலி

**பாட்னா, ஜூன் 30-**

பீகார் மாநிலம் முழுவதும் செவ்வாய்க்கிழமை மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்தது. அப்போது மின்னல் தாக்கியதில் 16 பேர் பலியாகினர். இங்குள்ள 38 மாவட்டங்களில் கிழக்கு சம்பரான் மாவட்டத்தில் 4 பேர், போஜ்பூர் மற்றும் சரண் ஆகிய மாவட்டங்களில் 6 பேர், மேற்கு சம்பாரண் மற்றும் அராரியா ஆகிய மாவட்டங்களில் நான்கு பேர், பங்கா மற்றும் முசாபர்பூர் ஆகிய மாவட்டங்களில் இருவர் பலியாகியுள்ளனர்.

உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் நிதிஷ் குமார், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

பீகார் அரசு அறிவித்துள்ள அறிக்கையில், சீரற்ற காலநிலையின் போது முன்னெச்சரிக்கையாக இருக்குமாறும், அரசு வழங்கிய அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் பீகார் முதல்வர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். "வீட்டிலேயே இருங்கள் மற்றும் மோசமான வானிலையில் பாதுகாப்பாக இருங்கள்," என்று முதல்வர் நிதிஷ் குமார் கூறியுள்ளார்.

# இந்தியாவுக்கான வெற்றிச்சூத்திரம்தான் தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சி

## திருப்பத்தூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**திருப்பத்தூர், ஜூன் 30-**

இந்தியா முழுமைக்கு மான வெற்றிச் சூத்திரம்தான் தமிழகத்தில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சி என்றும், மக்களின் ஒவ்வொரு தேவைகளையும் தேடித்தேடி நிறைவேற்றி வரக்கூடிய ஆட்சிதான் தி.மு.க. ஆட்சி என்றும் திருப்பத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது.

விஜயநகரப் பேரரசின் ஆட்சியின் போது, பதினான்காம் நூற்றாண்டில் திரு-வ ன-புரம் என்ற பெயரில் இருந்த ஊர்தான், திருப்பத் தூர் எனப் பெயர் மாற்றம் அடைந்து இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைத் தொடர்களால் சூழப் பட்ட, இயற்கை எழில் மிகுந்த மாவட்டம் இந்த மாவட்டம்.

இந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்டு இருக்கக்கூடிய 4 சட்டமன்ற தொகுதிகளை சார்ந்திருக்கக் கூடிய 16,820 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பில் 103 கோடியே 42 லட்சத்து 92 ஆயிரத்து 445 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்படி ஒவ்வொரு தேவைகளையும் தேடித்தேடி நிறைவேற்றி வரக்கூடிய ஆட்சி தான் தி.மு.க. ஆட்சி.

தி.மு.க. ஆட்சியில் தான், பல்வேறு திட்டங்களுக்கும் சேர்த்து ஒரே விழாவாக நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு திட்டத்திற்கு ஒரு விழா எடுப்பதாக இருந்தால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 365 நாளும், தனித்தனியாக நாம் விழா எடுத்தாக வேண்டும். அந்தளவுக்கு ஏராளமான திட்டங்கள், அந்தத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் படுக்கை வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகளுடன் மேம்படுத்தப்படும். திருப்பத்தூர் மாவட்டத்தில், உயர்கல்வியில் பின்தங்கியுள்ள நாட்றாம்பள்ளி வட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு, உயர்கல்வி பயில்வதற்கான கல்லூரி வசதிகள் இல்லாத நிலையைக் கருத்தில் கொண்டு, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று தொடங்கப்படும்.

இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவசிய, அவசரமான திட்டங்கள் எனவை எனவை என்பதைப் பட்டியலிட்டுப் பார்த்து அதனை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு நாம் தொடர்ந்து செய்து வருகிறோம்.

அனைத்து மக்களின் வளர்ச்சி இது தான் திராவிட மாடல் ஆட்சி. இந்த திராவிட மாடல் ஆட்சி என்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான வெற்றிச் சூத்திரமாக அமைந்துள்ளது. எப்போதுமே இந்தியாவுக்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாடுதான் இருந்திருக்கிறது.

உங்களின் வாழ்வு உயர, தமிழ்நாடும் உயரும். அத்தகைய பொற்காலத்தை உருவாக்குவதற்காகதான் எனது உடல்சோர்வைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், நான் உழைத்துக்கொண்டு இருக்கிறேன். எனது சக்தியை மீறி உழைத்துக் கொண்டு இருக்கிறேன்.

இத்தகைய ஆட்சிக் காலமானது தமிழ்நாட்டின் பொற்காலம். இந்தப் பொற்கால ஆட்சியைத் தொடர்வோம். இந்தியாவுக்கே முன்மாதிரியான ஆட்சியாக இதனை மலரச் செய்வோம். இவ்வாறு அவர் பேசினார்.

# மின் வாரிய ஊழியர்கள் சீருடை விதிகளை பின்பற்ற வேண்டும்

## மீறினால் நடவடிக்கை - தமிழக அரசு

**சென்னை, ஜூன் 30-**

மின் வாரிய ஊழியர்கள் சீருடை விதிகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றும் மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மின் வாரிய துறை செயலாளர் மணிகண்ணன் அரசு முதன்மை மற்றும் கண்காணிப்பு பொறியாளர்களுக்கு அனுப்பியுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:-

மின் வாரிய ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் பணியின் போது ஆண்கள் பேண்ட், சட்டை, வேஷ்டி மற்றும் தமிழக இந்திய கலாச்சாரத்தை பிரதி பலிக்கும் எந்த உடையையும் அணியலாம். 'கேசுவல்' உடை அணியக்கூடாது. நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தில் ஆஜராக வேண்டியிருந்தால் முழுக் கையுடன் கூடிய சிறியளவில் பட்டன் வைத்த கோட் அணிய வேண்டும்.

பட்டன் இல்லாத கோட் அணிய ஊழியர் விரும்பினால் கண்டிப்பாக 'டை' அணிய வேண்டும். அந்த உடையின் நிறமும், டிசைனும் சாந்தமான வகையில் இருக்க வேண்டும். பெண்களை பொறுத்த வரை சாந்தமான நிறத்தில் துப்பட்டாவுடன் சுடிதார் சேலை, சல்வார் போன்றவற்றை அணியலாம். அலுவலகத்தின் கண்ணியம் ஒழுக்கம் போன்றவற்றை பேணும் வகையில் அனைத்து ஊழியர்களும் இந்த உத்தரவை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். இதை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் 3-ம் பாலினத்தவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்

## சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு விளக்கம்

**சென்னை, ஜூன் 30-**

மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் 3-ம் பாலினத்தவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு விளக்கம் அளித்ததை அடுத்து மூன்றாம் பாலினத்தவர்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு வழங்கக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அரசு வேலைவாய்ப்பில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு சிறப்பு இட ஒதுக்கீடு வழங்கக் கோரி மூன்றாம் பாலினத்தவர் அமைப்பைச் சேர்ந்த பி.சுதா என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த மனுவில், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உச்ச நீதிமன்றம் அங்கீகாரம் வழங்கிய போதும், அவர்களுக்கு இதுவரை எந்த ஒரு நலத்திட்ட உதவிகளும் இட ஒதுக்கீடும் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

உச்சநீதிமன்றம் ஏற்கனவே மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், ரேஷன்கார்டு மற்றும் கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கு வழிவகை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கு என சிறப்பு ஒதுக்கீடு வழங்கப்பட்டது போல, மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் சிறப்பு ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி மாலா அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், மூன்றாம் பாலினத்தவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், சம்பந்தப்பட்ட மூன்றாம் பாலினத்தவர் பட்டியலின மற்றும் பழங்குடியினராக இருந்தால் அந்த பிரிவின் கீழ் இட ஒதுக்கீடு வழங்கப்படும் எனவும், பெண்ணாக கூறி சான்றிதழ் அளித்தால் பெண்களுக்கான 30 சதவீத இட ஒதுக்கீட்டில் இடம் வழங்கப்படும் என்று பிறப்பிக்கப்பட்ட அரசு உத்தரவை சமர்ப்பித்தார். இதை பதிவு செய்த நீதிபதிகள், வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## ஆஸ்கர் அகாடமியின் உறுப்பினராக அழைப்பு:

# நடிகர் சூர்யாவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, ஜூன் 30-**

ஆஸ்கர் அகாடமி அமைப்பின் உறுப்பினராக சேர நடிகர் சூர்யாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதையடுத்து நடிகர் சூர்யாவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஒவ்வோர் ஆண்டும் ஆஸ்கர் விருது குழுவில் உறுப்பினராக சேர பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் அழைக்கப்படுவார்கள். அந்த வகையில் 2022-ம் ஆண்டிற்கான புதிய உறுப்பினர்களை சேர்ப்பது தொடர்பான பட்டியலை ஆஸ்கர் வெளியிட்டுள்ளது. அதன்படி, அகாடமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட் சயின்சஸ் நிறுவனத்தில் சேர 397 புகழ் பெற்ற கலைஞர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் நடிகர்களின் பட்டியலில் சூர்யா இடம்பெற்றுள்ளார். ஆஸ்கர் அகாடமி அமைப்பின் உறுப்பினராக சேர சூர்யாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் ரீதியான தகுதி, அர்ப்பணிப்பு உள்ளிட்ட பல்வேறு தகுதிகளை கொண்டு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு உறுப்பினர்களின் அழைப்பாளர்கள் பட்டியலில், ஆஸ்கர் விருது வென்ற 15 பேர் உட்பட ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் 71 பேர் உள்ளனர். ஆஸ்கர் விருது குழுவில் உறுப்பினராக விருக்கும் முதல் தென்னிந்திய நடிகர் என்ற பெருமையை நடிகர் சூர்யா பெற்றுள்ளார்.

இந்த நிலையில் ஆஸ்கர் விருது குழுவில் இடம்பெற அழைப்பு பெற்றுள்ள நடிகர் சூர்யாவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது,

தனது தேர்ந்த நடிப்பாற்றலுக்கும், சமூக அக்கறை கொண்ட கதைத் தேர்வுகளுக்கும் மாபெரும் அங்கீகாரமாக, தி அகடமி விருது தேர்வுக்குழுவில் இடம்பெற அழைப்பு பெற்ற முதல் தென்னிந்திய நடிகர் என்ற உலகப் பெருமையை அடைந்துள்ள தம்பி சூர்யாவுக்கு எனது பாராட்டுகள். வானமே எல்லை. இவ்வாறு அதில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## அ.தி.மு.க. பொதுக்குழு விவகாரம்:

# சென்னை ஐகோர்ட் உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் இ.பி.எஸ். முறையீடு

**புது டெல்லி, ஜூன் 30-**

அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பாக சென்னை ஐகோர்ட் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் ஆதரவாளரும், அ.தி.மு.க பொதுக்குழு உறுப்பினருமான திருப்பூர் எம்.சண்முகம், அ.தி.மு.க.வில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர்களின் பதவிக்காலம் இன்னும் 5 ஆண்டுகளுக்கு இருக்கும் நிலையில் ஒற்றைத் தலைமை தொடர்பாகவோ அல்லது வேறு விஷயங்களுக்காகவோ அ.தி.மு.க பொதுக்குழுவில் எந்தவொரு தீர்மானமும் கொண்டு வரக்கூடாது, என வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை கடந்த ஜூன் 22 நள்ளிரவில் விசாரித்த ஐகோர்ட் நீதிபதிகள், அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஏற்கெனவே நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ள 23 தீர்மானங்கள் தவிர்த்து புதிய தீர்மானங்கள் குறித்தோ அல்லது கட்சி விதிகளில் திருத்தம் செய்வது குறித்தோ எந்தவொரு முடிவும் எடுக்கக் கூடாது என உத்தரவிட்டிருந்தனர். அதையடுத்து ஜூன் 23-ம் தேதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஒற்றைத் தலைமை தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் சென்னை ஐகோர்ட்டின் உத்தரவை எதிர்த்து அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளரான பழனிசாமி தரப்பில் தற்போது சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:- அ.தி.மு.க.வின் பொதுக்குழுவில் தலையீடு செய்து நீதிமன்றம் எந்த உத்தரவுகளையும் பிறப்பிக்க அதிகாரம் கிடையாது. அ.தி.மு.க. அவைத் தலைவர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களின் ஒட்டுமொத்த கருத்தை பொறுத்தே தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்படும். கட்சி விதிகளின்படி பொதுக்குழுவுக்கே அனைத்து அதிகாரங்களும் உள்ளது. அதன்படி, விதிகளை திருத்தம் செய்யவும், கட்சியில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளை நீக்கிவிட்டு பொதுச் செயலாளர் பதவியை மீண்டும் உருவாக்கவும் பொதுக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

எனவே, அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பாக சென்னை ஐகோர்ட் கடந்த ஜூன் 22-ம் தேதி பிறப்பித்துள்ள உத்தரவு சட்டவிரோதம் என்பதால் அதற்கு தடை விதிக்க வேண்டும். அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு கோரப்பட்டுள்ளது. இம்மனு விரைவில் விசாரணைக்கு வருகிறது.

முன்னதாக அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பாக மேல்முறையீடு மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டால் தங்கள் தரப்பு கருத்துகளை கேட்காமல் உத்தரவு ஏதும் பிறப்பிக்கக்கூடாது என்று ஓ.பி.எஸ். தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.க வேட்பாளர்களுக்கு சின்னம் கிடைப்பதில் சிக்கல்

**சென்னை, ஜூன் 30-**

ஒற்றை தலைமை விவகாரத்தால் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க வேட்பாளர்கள் இன்று மாலைக்குள் படிவங்களை தாக்கல் செய்யாவிடில் அவர்களுக்கு இரட்டை இல்லை கிடைக்காது என்று தேர்தல் ஆணைய விதிகளில் உள்ளது. வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும். தமிழகத்தில் காலியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஜூலை 9-ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி மொத்தம் 510 பதவிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இந்தப் பதவிகளுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 20-ம் தேதி தொடங்கி 27-ம் தேதி நிறைவு பெற்றது. வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று (ஜூன் 30) கடைசி நாள் ஆகும்.

உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடுவோரின் வேட்புமனுக்கள் பரிசீலனை நேற்று முன்தினத்துடன் முடிந்தது. இன்றைக்குள் (30-ம் தேதி) வேட்புமனுவை வாபஸ் பெற வேண்டும். வாபஸ் பெறுவதற்கான கால அவகாசம் நிறைவடைவதற்கு முன்பாகவே படிவங்களை வழங்கினால் சின்னம் ஒதுக்கப்படும் என தேர்தல் ஆணையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 3 மணியுடன் வேட்புமனு திரும்ப பெறுவதற்கான கால அவகாசம் நிறைவடையும் போது சுயேட்சை வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

அதற்குள்ளாக கட்சித்தலைமை கையொப்பமிட்டு ஒப்புதல் அளித்தால் மட்டுமே அ.தி.மு.க வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னம் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இன்று மாலைக்குள் படிவங்களை சமர்ப்பிக்க தவறினால் அ.தி.மு.க வேட்பாளர்கள் சுயேச்சை சின்னத்திலேயே போட்டியிட வேண்டிய சூழல் உருவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகை மீனாவின் கணவர் மறைவு: திரை பிரபலங்கள் நேரில் அஞ்சலி

**சென்னை, ஜூன் 30-**

உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகர் உயிரிழந்தார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து திரை பிரபலங்கள் பலர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

தென்னிந்திய பிரபல பன்மொழி நடிகையான மீனா, தமிழ் சினிமாவில் நடித்திருப்பதோடு மட்டுமின்றி, கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். இவரை அனைத்து மொழியினரும் தங்களுக்கு பிடித்த நடிகையாக அங்கீகரித்திருந்தனர்.

2019- ஆம் ஆண்டு பெங்களூரைச் சேர்ந்த மென்பொருள் பொறியாளரான வித்யாசாகரை நடிகை மீனா திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு நைனிகா என்ற மகள் உள்ளார். இந்த நிலையில் நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகர் நுரையீரல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து அவருக்கு நுரையீரல் தொற்று மாற்று அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

ஆனால், நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கான உறுப்புகளை (நுரையீரல்) வழங்குபவர்கள் யாரும் இல்லாததால் அவருக்கு சிகிச்சை அளிக்க இயலவில்லை. இதனிடையே கடந்த ஜனவரி மாதம் வித்யாசாகர் கொரோனாவால் பாதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சைக்கு பின் அவர் குணமடைந்து வீடு திரும்பினார்.

இந்நிலையில், மீண்டும் நுரையீரல் பிரச்னை காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். உயர் சிகிச்சைக்காக மற்றொரு தனியார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் வித்யாசாகர் செவ்வாய்க்கிழமை இரவு உயிரிழந்தார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து திரை பிரபலங்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர். ரஜினி, சரத்குமார் உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி மீனாவுக்கு ஆறுதல் கூறினர்.

திருமணத்திற்கு பிறகும் நடிகை மீனா தொடர்ந்து நடித்து வந்தார். 2021-ஆம் ஆண்டு நடிகர் மோகன்லாலுடம் மலையாளத்தில் தர்சனம் 2 என்ற படத்தில் நடித்தார். இவர் நடித்த பல படங்கள் சூப்பர் ஹிட் ஆனதையடுத்து, கடந்த ஆண்டு தனது திருமண நாளில், திருமண வரவேற்பு புகைப்படத்தைப் பகிர்ந்திருந்த மீனா, ''என் வாழ்வில் வானவில் போல வந்து அழகாக ஓவியம் வரைந்தீர்கள்'' என்று தனது கணவர் குறித்து பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று விண்ணில் பாய்கிறது பி.எஸ்.எல்.வி சி-53 ராக்கெட்

## 25 மணி நேர கவுன்ட் டவுன் தொடக்கம்

**ஸ்ரீஹரிகோட்டா, ஜூன் 30-**

இன்று பி.எஸ்.எல்.வி சி-53 ராக்கெட்டை விண்ணில் ஏவுவதற்கான 25 மணி நேர கவுன்ட் டவுன் நேற்று மாலை 5 மணிக்கு தொடங்கியது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வணிகரீதியாக வெளிநாட்டு செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது. அதன்படி சிங்கப்பூருக்கு சொந்தமான டிஎஸ்-இஒ, நியூசர் உள்பட 3 செயற்கைக்கோள்கள் பி.எஸ்.எல்.வி சி-53 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து இன்று (ஜூன் 30-ஆம் தேதி) மாலை 6 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது.

அதில் முதன்மைச் செயற்கைக்கோளான டிஎஸ்-இஒ 365 கிலோ எடை கொண்டது. இது புவியை துல்லியமாக புகைப்படம் எடுக்கும் திறன் உடையது. இதுதவிர 155 கிலோ எடை கொண்ட நியூசர் செயற்கைக்கோள் சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் தொழில்நுட்பத்தில் இயங்கக்கூடியது. இது இரவு, பகல் உள்பட அனைத்து பருவநிலைகளிலும் தெளிவான புகைப்படங்களை எடுத்து அனுப்பக்கூடியது. இதனுடன் கல்விசார்



பணிக்காக சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பக் பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்த ஸ்கூப்-1 என்ற செயற்கைக்கோளும் விண்ணில் ஏவப்பட உள்ளது.

இதற்கிடையே ஏவுதலின்போது செயற்கைக்கோள்களை திட்டமிட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்திய பின்னர் பி.எஸ்.எல்.வி ராக்கெட்டின் இறுதிபாகமான பிஎஸ் 4 பகுதி உதவியுடன் சில ஆய்வு கருவிகளும் புவி வட்டப் பாதைக்கு அனுப்பப்பட உள்ளன.

## தீவிரவாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது:

# உதய்பூர் படுகொலைக்கு மம்தா பானர்ஜி கண்டனம்

**கொல்கத்தா, ஜூன் 30-**

ராஜஸ்தானின் உதய்பூரில் தையல்காரர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டரில், வன்முறையும் தீவிரவாதமும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. உதம்பூரில் நடந்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம். சட்டம் தனது கடமையை செய்யும், மக்கள் அனைவரும் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரைச் சேர்ந்த தையல்காரர் கன்னையா லால், முகம்மது நபிகள் குறித்து அவதூறாகப் பேசிய பாஜக நிர்வாகி நூபுர் சர்மாவின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, கன்னையா லால் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) கழுத்தறுத்து படுகொலை செய்யப்பட்டார். மேலும் இந்த கொலையை விடியோவாகப் பதிவிட்டு, இஸ்லாத்தை அவமதித்த காரணத்தால் கன்னையா லாலை பழிதீர்த்தாக குறிப்பிட்டுள்ளனர். இதையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# புதுச்சேரியில் 7 நாட்கள் கழித்து அரசு பஸ்கள் மீண்டும் இயக்கம்

**புதுச்சேரி, ஜூன் 30-**

முதல்வர் ரங்கசாமியுடன் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதால் 7 நாட்களாக நடந்த போராட்டம் முடிவுக்கு வந்ததையடுத்து பிஆர்டிசி ஊழியர்கள் பணிக்குத் திரும்பி நேற்று மதியம் முதல் அரசு பஸ்கள் இயங்கத் தொடங்கின.

புதுவை அரசு போக்குவரத்துக்கழகமான பிஆர்டிசி டிரைவர்கள், கண்டக்டர்கள் தாக்கப்படுவதை கண்டித்தும், பணி பாதுகாப்பு கோரியும் கடந்த 23ம் தேதி முதல் வேலைநிறுத்த போராட்டம் நடத்தினர். நிர்வாகம் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால் போராட்டம் தொடர்ந்தது. கிராமப்புற பகுதியில் பஸ் வசதியின்றி மக்கள் அவதிப்பட்டனர். போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர அமைச்சர் சந்திரபிரியங்கா தலைமையில் போராடக்குழுவினருடன் பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையின் போது ஊழியர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும். பணிப் பாதுகாப்பு வழங்க வேண்டும். பணி நீக்கம் செய்யப்பட்ட 12 பேருக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இது குறித்து முதல்வருடன் பேசி முடிவெடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. கோரிக்கை நிறைவேறும்வரை போராட்டம் தொடரும் என தொழிலாளர்கள் அறிவித்தனர். இதனால் நேற்று 7வது நாளாக பிஆர்டிசி ஊழியர்களின் போராட்டம் தொடர்ந்தது.

இந்த நிலையில், முதல்வர் ரங்கசாமியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடந்தது. எதிர்க்கட்சி தலைவர் சிவா, சம்பத் எம்எல்ஏ மற்றும் போராட்டகுழுவினர் பங்கேற்றனர். அப்போது, ''பணிக்கு திரும்பி பஸ்களை இயக்குங்கள். கோரிக்கைகளை பரிசீலித்து நிறைவேற்றுகிறேன்'' என்று முதல்வர் உறுதியளித்தார்.

இதனையடுத்து போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு ஊழியர்கள் நேற்று பிற்பகலில் பஸ்களை இயக்கினர். அப்போது நிர்வாகிகள் கூறுகையில், ''முதல்வர் வாக்குறுதி தந்துள்ளார். அத்துடன் போக்குவரத்துத்துறைக்கு தனி இயக்குநர் நியமிப்பதுடன் புதிய பஸ்கள் வாங்குவதாக தெரிவித்தார். மேலும் ஊழியர்கள் ஊதியம் உயரத்தி தருவதாகக் குறிப்பிட்டார். இதையடுத்து பணிக்கு திரும்பினோம்'' என்று குறிப்பிட்டனர்.

# சிதம்பரம் திருக்கோயில் விவகாரத்தில் ஆயிரக்கணக்கான புகார்கள் வந்துள்ளன

## அமைச்சர் சேகர்பாபு தகவல்

**சென்னை, ஜூன் 30-**

சிதம்பரம் திருக்கோயிலில் சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொண்டிருக்கும் நடவடிக்கைகள், அரசின் அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகள் குறித்து ஆயிரக்கணக்கான புகார்கள் வந்துள்ளன என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை வளசரவாக்கம் பகுதியில் உள்ள அகத்தீஸ்வரர் மற்றும் வேள்விஸ்வரர் திருக்கோயில் திருக்குளங்களில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: ''ஏற்கெனவே சிதம்பரம் திருக்கோயிலில் சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொண்டிருக்கும் நடவடிக்கைகளும், அரசின் அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகள் குறித்தும் ஆயிரக்கணக்கான புகார்கள் வந்துள்ளன. லட்சக்கணக்கானோர் கையெழுத்திட்டு மனுக்களாகவும் கொடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள குழு, ஆய்வு மேற்கொண்டு வருகிறது. அந்த ஆய்வு முடிவின் அறிக்கை வந்தவுடன், சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, தமிழக முதல்வரின் கவனத்துக்கு எடுத்துச் சென்று அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கு செல்ல இருக்கின்றோம். ஒவ்வொரு அடியையும் அளந்து, நிதானமாக, அழுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறது இந்து சமய அறநிலையத் துறை'' என்று அவர் கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



நாட்டில் தீவிரவாதம் எந்த அளவுக்கு பரவியுள்ளது என்பதற்கு உதய்பூர் படுகொலையே எடுத்துக்காட்டு. சட்டம் அனைவருக்கும் சமம். சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்கப்பெற வேண்டும்.

- அசாதுதீன் ஒவைஸி



அஞ்சலக சேவைகளுக்கு ஜி.எஸ்.டி வரி விதிக்கும் முடிவை கைவிட வேண்டும். ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த விதமான புதிய வரி விதிப்பையோ, ஏற்கெனவே அளிக்கப்பட்ட வரிவிலக்கை ரத்து செய்வதையோ மத்திய அரசு மேற்கொள்ளக் கூடாது.

- தினகரன்



ஊழலுக்கு வழிவகை செய்யும் தற்காலிக ஆசிரியர் பணி நியமனத்தை கைவிட்டு, ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளவர்களை அரசு பள்ளிகளில் நிரந்தர ஆசிரியர்களாக பணியமர்த்த வேண்டும். இதன் மூலம் ஏழை எளிய குடும்பங்களை சார்ந்த பிள்ளைகளின் கல்வித்தரம் காக்கப்படும்.

- விஜயகாந்த்



இளைஞர்களிடையே நிலவும் வேலையில்லா திண்டாட்ட நெருக்கடியை பயன்படுத்தி அக்னி பாதை திட்டத்தை திணிக்க பா.ஜ.க. அரசு முயற்சி செய்கிறது. இந்தியாவின் 75 ஆண்டுகால வரலாற்றில் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாத ராணுவம், முதல்முறையாக தலையிட்டிருப்பது இத்திட்டத்தில் உள்நோக்கம் இருப்பதாக தெரிகிறது.

- இரா.முத்தரசன்

# அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு

## செய்தியாளர்கள் பயணத்தின் போது கலெக்டர் ஆய்வு



**தேனி, ஜூன் 30-**

தேனி மாவட்டம், தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊஞ்சாம்பட்டியில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் முரளீதரன், செய்தியாளர்கள் பயணத்தின் போது, பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, தெரிவித்ததாவது,

தமிழக முதல்வர் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் நலனை காத்திடும் வகையில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் பல்வேறு வேளாண் சார்ந்த திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வேளாண் பெருங்குடிமக்களை பயன் பெற செய்து வருகிறார்கள்.

அதனடிப்படையில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள், விதை, நாற்றுகள் வழங்குதல், வேளாண்மை பொறியியல் துறை மூலமாக புதர்களை நீக்கி, நீர்; பாசன வசதி ஏற்படுத்தி சாகுபடிக்கு கொண்டு வருவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதன் மூலமாக தொலைநோக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமான நிகர சாகுபடி பரப்பு மேலும் அதிகரிக்கப்படும். தேனி மாவட்டத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் 35 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு வருகிறது. கிராம பஞ்சாயத்துகளில் 10 பண்ணைக் குட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் ஊஞ்சாம்பட்டி கிராம பஞ்சாயத்தில் உருவாக்கப்பட்ட 3-வது தொகுப்பில் 23 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 510 அடி ஆழத்தில் ரூ.1.54 இலட்சம் மதிப்பில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆழ்துளை கிணற்றுக்கு தேவையான மின் மோட்டார், புதிய இலவச மின் இணைப்பு மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் பணியை விரைந்து மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். ஆய்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தனலட்சுமி, உதவி செயற்பொறியாளர் ராஜா, உதவி பொறியாளர்கள் ராமகிருஷ்ணன், .வினோத்குமார் மற்றும் மோனிஷா, வேளாண்மை அலுவலர்கள் சதீஷ் மற்றும் நிவேஷ், வேளாண்மை உதவி அலுவலர் கண்ணன் மற்றும் துறை அலுவலர்கள், செய்தியாளர்கள், விவசாயிகள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நாம் தமிழர் கட்சி சார்பில் இலங்கைத் தமிழர்களுக்கு 5 டன் மதிப்பில் உணவுப் பொருட்கள் - நிதி உதவி



**பரமக்குடி, ஜூன் 30-**

இராமநாதபுரம் மேற்கு மாவட்ட நாம் தமிழர் கட்சி சார்பில் இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் சேகரிக்கப்பட்ட 5 ன் உணவுப் பொருட்கள்,மருந்துகள் மற்றும் ரூ.50 ஆயிரம் நிதியினை இலங்கைக்கு அனுப்பும் நிகழ்வு பரமக்குடியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாநில ஒருங்கிணைப்பாளர் வெங்கு ளம் ராஜு தலைமை தாங்கினார்.பாராளுமன்ற பொறுப்பாளர் குமரவேல் முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் காமராஜ் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் இசையரசன், மாவட்ட பொருளாளர் ஜஸ்டின் வளனரசு, மாவட்ட மகளிர் பாசறை செயலாளர் சசிகலா, துணைச் செயலாளர் திரேசாமேரி, தகவல் தொழில்நுட்ப செயலாளர் பால முருகன், செயலாளர் அருள் விக்டர், பொருளாளர் இன்பா, முதுகுளத்தூர் சட்ட மன்ற தொகுதி செயலாளர் சிவக்குமார், பெருங்களூர் முருகன், அமர்நாத், வாசு, மோகன்குமார், காளீஸ்வரன் மற்றும் பரமக்குடி,முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.பரமக்குடி சட்டமன்ற தொகுதி தலைவர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

# சாயல்குடியில் மாணவர்களுக்கு வழிகாட்டும் நிகழ்வு



**கடலாடி, ஜூன் 30-**

இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் இயங்கிவரும் மனிதம் அறக்கட்டளை கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறு மக்கள் சேவைகளை பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார்கள். சமீபகாலமாக அரசு போட்டித் தேர்வுக்கு இலவச வகுப்பும் நடத்தி வருகிறார்கள் அதனடிப்படையில் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவ மாணவிகளுக்கு அவர்களின் எதிர்காலம் குறித்த கனவுகளை பூர்த்தி செய்யும் வகையில் வழிகாட்டும் நிகழ்வு நடத்தப்பட்டது,

இந்த நிகழ்வில் தமிழ்நாடு தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜெயக்கண்ணன் தலைமை வகித்தார்.

சாயல்குடி பேரூராட்சித் தலைவர் மாரியப்பன் - துணைத் தலைவர் மணிமேகலை பாக்கியராஜ் -, எம்.டி.சி தலைமை ஆசிரியர் மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக பேங்க் ஆப் இந்தியா மேலாளர் ஜெகதீஸ் மற்றும் கோவை, சென்னையைச் சேர்ந்த கல்வியாளர்கள் சதீஷ், தினேஷ் மற்றும் சையத் இம்ரான் - மனிதம் அறக்கட்டளை நிறுவனர் சேக் முகமது உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். மனிதம் அறக்கட்டளை தலைமை ஒருங்கிணைப்பாளர் முகம்மது முசாபர் கனி வரவேற்புரை அளித்தார்.

# அருப்புக்கோட்டை, புல்வாய்க்கரை பகுதிகளில் இன்று மின்தடை

**அருப்புக்கோட்டை, ஜூன் 30-**

அருப்புக்கோட்டை துணைமின்நிலையப் பகுதிகளான வெள்ளைக்கோட்டை, அரசு மருத்துவமனை, நேரு மைதானம், பந்தல்குடி சாலை, அண்ணாநகர், சொக்கலிங்கபுரம், திருச்சுழி சாலை, ராஜீவ் நகர், ஜெய நகர், விஜய நகரம், லட்சுமி நகர், பிள்ளையார் கோவில் தெரு, காந்தி நகர், பூபால் நகர், மின்வாரிய சாலை, மீனாட்சி புரம், நேதாஜி சாலை, மேட்டாங்கரை, கைலாச ஊருணி ஆகிய பகுதிகள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மேலும் புல்வாய்க்கரை துணைமின்நிலையத்திற்கு உள்பட்ட புல்வாய்க்கரை, ஆவாரங்குளம்,அ.முக்குளம்,அழகாபுரி,சிறுவனூர், வி நாங்கூர், எழுவணி, குண்டுகுளம், தொட்டியங்குளம், திம்மாபுரம்,வேப்பங்குளம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் மாதாந்திர துணைமின்நிலைய பராமரிப்புப் பணிகளை முன்னிட்டு இன்று 30.6.2022 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மின்விநியோகம் இருக்காது என்பதை இத்தகவல் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம் என அருப்புக்கோட்டை கோட்ட மின்வாரிய செயற்பொறியாளர் இரா.கண்ணன் தெரிவித்துள்ளார்.

# மைவிர் இன்ஜினியரிங்கின் தொழில் நுட்பம் கட்டுமான செலவை குறைக்கிறது

**சென்னை, ஜூன் 30-**

ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட மைவிர் இன்ஜினியரிங் - ஒரு புதுமையான, எஃகு-கலவை வடிவமைப்பு, புனையமைப்பு மற்றும் கட்டுமான நிறுவனம், காப்புரிமை பெற்ற கட்டுமான தொழில் நுட்பத்தை ஒன்றிணைத்துள்ளது, இது கட்டுமான செலவை குறைந்தது 20 சதவீதம் மற்றும் கட்டுமான நேரத்தை 60% குறைக்கிறது. பல்வேறு உள்நாட்டு மற்றும் உலகளாவிய காரணிகளின் காரணமாக அதிக உள்ளீடு செலவுகள் மற்றும் செலவு அதிகரிப்பு ஆகியவற்றின் அழுத்தத்தில் தத்தளிக்கும் இந்திய உள்கட்டமைப்புத் துறைக்கு இது ஒரு பெரிய நிம்மதி பெருமூச்சு ஆகும்.

இது குறித்து பாருபள்ளி - நிர்வாக இயக்குனர், மைவிர் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் சரத் சி கூறுகையில், குறுகிய கால இடைவெளியில் எங்கள் வடிவமைப்பு-கட்டுமான கருத்துடன் கட்டிடங்கள் முதல் பாலங்கள் வரை மிகவும் நிலையான மற்றும் திறமையான முறையில் உள்கட்டமைப்பைக் கட்டமைக்கும் விதத்தை மாற்றியமைத்துள்ள ஒரே நிறுவனம் இன்று நாட்டிலேயே நாங்கள் மட்டுமே. எங்களின் புதுமையான தீர்வுகள் கட்டுமான செலவுகளை 20 சதவீதம் மற்றும் கட்டுமான நேரத்தை 60% குறைக்கிறது. வடிவமைப்பு முதல் உற்பத்தி வரை ஒரே குடையின் கீழ் செயல்படுத்துவது வரை ஒரே மூலப் பொறுப்புடன் அனைத்து அளவிலான திட்டங்களையும் மேற்கொள்வதற்கான பரந்த அளவிலான நிபுணத்துவத்தை நாங்கள் நன்கு பெற்றுள்ளோம். எங்கள் உயர்தர மற்றும் புதுமையான வடிவமைப்பு தீர்வுகள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் அபாயங்கள், செலவு மீறல்கள், உரிமைகோரல்கள் மற்றும் திட்ட காலக்கெடுவை மேம்படுத்த உதவுகின்றன என்று கூறினார்.

# ஷம்ஷேரா திரைப்படத்தின் முதல் பாடல் குறித்து ரன்பீர் கபூர் அறிவிப்பு

**சென்னை, ஜூன் 30-**

பிரம்மாண்டமான ஆக்ஷன் பொழுதுபோக்குத் திரைப்படமான ஷம்ஷேராவில் பாலிவுட் சூப்பர்ஸ்டார் ரன்பீர் கபூர், கதாநாயகனாக நடிக்கிறார். சஞ்சு திரைப்படத்தின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் கழித்து, ரன்பீர் மீண்டும் நடிக்கும் ஷம்ஷேரா திரைப்படத்தின் முதல் பாடலான, ஜி ஹுஜூர் நாளை டிஜிட்டல் முறையில் வெளியாகவுள்ளது. பழங்குடியினத் தலைவர் ஷம்ஷேராவின் மகன், பல்லி கதாபாத்திரத்தில் நடிக்கும் ரன்பீர் பாடுவதாக இந்த பாடல் அமைந்துள்ளது. கொடுமையான காஸா கோட்டையின் ஒடுக்குமுறை நிறைந்த வாழ்க்கைக்கும். இரக்கமற்ற அரக்கனான ஷுத் சிங்கின் சித்தரவதைக்கும் இடையே வாழும் சிறைக் குழந்தைகள், மீண்டும் அத்தகைய வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு முன்பாக, ரன்பீர் அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக பாடுவதாக இந்த பாடல் படமாக்கப்பட்டுள்ளது. ஷுத் சிங் கதாபாத்திரத்தில் சஞ்சய் தத் நடிப்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து இயக்குனர் கரன் மல்ஹோத்ரா கூறுகையில், பல்லி மற்றும் அவனது குட்டி நண்பர்களுக்கு இடையே உள்ள உறவினை இந்த மகிழ்ச்சியான ஜி ஹுஜூர் பாடல் சொல்லும். காஸா கோட்டையின் சுவர்களுக்குள், அடக்குமுறையின் கீழ் உயிர்பிழைத்து வாழ்ந்தாலும் கூட பல்லி மற்றும் அவனது சிறிய நண்பர்களின் கூட்டத்தில் ஒரு இதமான குறும்புத்தனம் இருந்துவருகிறது. எப்போதாவது கிடைக்கும் இது போன்ற தருணங்களில் தங்கள் மனதில் தோன்றுவதை பேசி சுதந்திரமாக இருப்பது எப்படி என்று, பல்லி தனக்கே உரிய வழியில் கூறுவதாக ஜி ஹுஜூர் பாடல் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறினார். ஆதித்யா சோப்ரா தயாரித்து, கரன் மல்ஹோத்ரா இயக்கியுள்ள இந்த அதிரடி பிரம்மாண்டத் திரைப்படம், இந்தி, தமிழ், மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் ஜூலை, 22, 2022 அன்று வெளியாகவுள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூரில் 11 கிலோ கஞ்சா பறிமுதல்: 4 பேர் கைது

**விருதுநகர், ஜூன் 30-**

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே போலீஸார் நடத்திய வாகன சோதனையில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நான்கு பேரை கைது செய்து அவரிடம் இருந்து 11 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். மேலும் அவர்கள் பயன்படுத்திய ஒரு கார் இரண்டு டூவீலர்கலை போலீசார் பறிமுதல் செய்தனர்.

வன்னியம்பட்டி எஸ்.ஐ. கனகராஜ் தொட்டியபட்டி பகுதியில் வாகன சோதனையில் வாகன சோதனையின் செய்த போது ராஜபாளையத்தை சேர்ந்த வெங்கடேஷ் குமார் 34 , என்பவரிடமிருந்து 2 கிலோ கஞ்சா, பறிமுதல் செய்தனர். மேலும் அவரிடம் நடத்திய விசாரணையில் ராஜபாளையத்தை சேர்ந்த சந்தனம் 37 என்பவரிடம் இருந்து1 கிலோ கஞ்சாவும், வத்திராயிருப்பு தாலுகா மேலக்கோட்டை சேர்ந்த சிவக்குமார் 34, உசிலம்பட்டி நல்ல மாயான் ஆகியோரிடம் இருந்து 8 கிலோ கஞ்சா பறிமுதல் செய்தனர்.

இதனை அடுத்து நான்கு பேரும் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்த கார் மற்றும் 2 டூவீலர்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

# மனைவி, மாமியாரை எரித்துக் கொன்ற வழக்கில் கூலித் தொழிலாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை

**விருதுநகர், ஜூன் 30-**

மதுரை ஜெய்ஹிந்த்புரம் வீரகாளியம்மன் தெருவை சேர்ந்தவர் முருக பாண்டி வயசு 44 கூலித்தொழிலாளி இவரது மனைவி முத்துலட்சுமி வயசு 34 முத்துலட்சுமியின் அம்மா கமலாதேவி வயது 52 முத்துலட்சுமிக்கு முருக பாண்டிக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது கடந்த 2009ஆம் ஆண்டு முத்துலட்சுமி திருத்தங்களில் உள்ள தனது தாய் வீட்டுக்கு வந்து உள்ளார் இதனால் ஆத்திரமடைந்தமுருக பாண்டி கடந்த 14 /6 /2009 அன்று அதிகாலை 4 மணிக்கு மனைவி வீட்டுக்கு சென்று மனைவியும் அத்தையும் தூங்கிக் கொண்டிருந்தபோது கதவின் கீழ் பகுதி வழியாக பெட்ரோலை ஊற்றி தீ வைத்து விட்டார்இதில் முத்துலட்சுமியும் முருக பாண்டி அத்தை கமலா தேவியும் படுகாயமடைந்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர் அங்கு சிகிச்சை பலனின்றி இரண்டு பேரும் 15/ 6 /2009. இறந்து விட்டனர் இதுதொடர்பாக திருத்தங்கல போலீசார் வழக்கு பதிவு செய்து

முருக பாண்டியை கைது செய்தனர் இது தொடர்பான வழக்கு திருவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட மகிளா விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கிய நீதிபதி பகவதி அம்மாள் மனைவி மற்றும் அத்தையை எரித்துக் கொண்ட முருக பாண்டிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார் மேலும் இதனை ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டார் மேலும் முருக பாண்டிக்கு 5000 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு கூறினார்

# பதினெட்டாங்குடி ஊராட்சியில் 15 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டும் பணி

## பெரியபுள்ளான் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்



**மேலூர், ஜூன் 30-**

மதுரை மாவட்டம் மேலூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட பதினெட்டாங்குடி ஊராட்சியில் உள்ள பட்டத்தரசி அம்மன் கோவிலில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் (2021-2022) கீழ் சுமார் 15 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டும் பணியினை மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரிய புள்ளான் என்ற செல்வம், முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசன் ஆகியோர் பூமி பூஜை செய்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மேலூர் யூனியன் சேர்மன், மேலூர் தெற்கு ஒன்றிய செயலாளருமான பொன்னுச்சாமி, கொட்டாம்பட்டி முன்னாள் யூனியன் சேர்மன் வெற்றிச்செழியன், மேலூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வக்கீல் பொன் ராஜேந்திரன், மாநில பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், பதினெட்டாங்குடி ஊராட்சி மன்ற தலைவர் சுதா ஆண்டி, கொட்டகுடி கூட்டுறவு சங்க தலைவர் சுப்பையா, துணைத்தலைவர் முத்துகிருஷ்ணன், திருவாதவூர் ஊராட்சி மன்ற தலைவர் இளவரசன், கிடாரிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், வெள்ளரிப்பட்டி ஒன்றிய கவுன்சிலர் பிரபு, தெற்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் உதய சங்கர், வடக்கு ஒன்றிய பொருளாளர் சரவணன், நகர் துணை செயலாளர் பாண்டி லட்சுமி, நகர் கழக பொருளாளர் கந்தசாமி, வட்டச் கழக செயலாளர்கள் பாண்டித் துரை, திருப்பதி,சக்கரவர்த்தி, திருநாவுக்கரசு, அருள் பாண்டி, முன்னாள் மாவட்ட பிரதிநிதி சீனிவாசன், முன்னாள் நகர் கழக செயலாளர் நாகசுப்பிரமணியன், மேலூர் தெற்கு ஒன்றிய இலக்கிய அணி செயலாளர் குணாநிதி, மேலூர் இளைஞர் பாசறை ஒன்றிய தலைவர் சிவா, மற்றும் கரிகாலன், காமாட்சி, சிவகுரு, பிரகாஷ், சந்துரு, மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயபாலன், அம்பலகாரர்களும், இளங்கச்சிகளும், கிராம பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# வடுகபட்டி, தாமரைக்குளம் பேரூராட்சி மன்ற கூட்டம்



**தேனி, ஜூன் 30-**

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே வடுகபட்டி மற்றும் தாமரைக்குளம் பேரூராட்சியில் மன்ற கூட்டம் நேற்று நடைபெற்றது.

வடுகபட்டி: வடுகபட்டி பேரூராட்சியில் மன்ற கூட்டம் தலைவர் நடேசன் தலைமையிலும், துணைத்தலைவர் சுந்தரவடிவேல் என்ற அழகர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் அம்புஜம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சபரிபரமன், சக்தி, மனோரஞ்சிதம் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

உறுப்பினர்கள் தமது வார்டுகளில் சாலை, குடிநீர், கழிவுநீர் கால்வாய், சுகாதார வளாகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கோரிக்கை வைத்தனர். தலைவர் நடேசன் உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். செயல் அலுவலர் அம்புஜம் நன்றி கூறினார்.

தாமரைக்குளம் பேரூராட்சி: தாமரைக்குளம் பேரூராட்சி மன்ற கூட்டம் தலைவர் பால்பாண்டி தலைமையிலும், துணைத்தலைவர் மலர்கொடிசேதுராமன், செயல் அலுவலர் ஆளவந்தான் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நியமனக்குழு தலைவர் பாலாமணிபழனிமுருகன், பேரூர் மன்ற உறுப்பினர்கள் ராஜேந்திரன், தேவகிதென்னரசு, சாந்திசெல்லராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயல் அலுவலர் ஆளவந்தான் நன்றி கூறினார்.

# வாலிநோக்கம் பகுதியில் கொசுக்களை ஒழிக்க மருந்து தெளிக்கும் பணி தீவிரம்

**சாயல்குடி, ஜூன் 30-**

மலேரியா காய்ச்சலை பரப்பும் கொசுக்களை முற்றிலும் ஒழிக்க வாலிநோக்கம் பகுதிகளில் சுகாதாரத்துறை சார்பில் வீடு வீடாக சென்று கொசு மருந்து தெளிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வரு கி றது.ரா ம நா த பு ரம் மாவட்டம் கடலாடி வட்டாரத்தில் உள்ள ஏர்வாடி வாலிநோக்கம் பகுதிகளில் மலேரியா காய்ச்சலை பரப்பும் கொசுக்களை முற்றிலும் ஒழிக்க பரமக்குடி சுகாதாரத் துறை சார்பில் வருடத்திற்கு இரண்டு முறை வீடு வீடாக சென்று கொசு மருந்து தெளிப்பான்கள் மூலம் தெளிக்கப்படுகிறது. அதன்படி பொதுசுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர். செல்வநாயகம் உத்தரவுப்படி பரமக்குடி சுகாதாரத்துறை துணை இயக்குனர் டாக்டர். இரவீந்திரன் ஆலோசனைப்படிகடந்த 1 ம் தேதி ஏர்வாடி தர்ஹா பகுதிகளில் முதல் கட்ட கொசுமருந்து தெளிக்கும் பணி துவங்கியது.

30 நாட்கள் நடைபெறும் இந்த கொசு மருந்து தெளிப்பு பணியில் 30 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களோடு இணைந்து டெங்கு கொசுப் புழு ஒழிப்பு பணியாளர்களும் வீடு வீடாக சென்று தண்ணீரில் வளரும் கொசுப் புழுக்களை அபேட் மருந்துகள் ஊற்றி அழித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று கீழமுந்தல் கிராமத்தில் நடைபெற்ற இப்பணிகளை பரமக்குடி சுகாதாரத்துறை முதுநிலை பூச்சியியல் அலுவலரும் மாவட்ட மலேரியா அலுவலருமான ரமேஷ் நேரில் ஆய்வு செய்தார்.

இதில் சுகாதார ஆய்வாளர்கள் ராஜசேகர் சுப்பிரமணியன்- பாலமுருகன்-அரவிந்; -உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இரண்டாம் கட்ட கொசு மருந்து தெளிக்கும் பணி வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும் எனவும் மேலும் மலேரியா கொசுப்புழுக்களை ஒழிக்க கம்பூச்சியா வகை மீன்களை கடலோரப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் விடப்பட்டுள்ளது- இதனால் மலேரியா காய்ச்சல் பாதிப்பு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது என மாவட்ட பூச்சியியல் அலுவலர் மற்றும் மாவட்ட மலேரியா அலுவலருமான ரமேஷ் கூறினார்.

# திருமங்கலம் ரயில்நிலையத்தில் வாகன காப்பகம் அமைத்திட பயணிகள் கோரிக்கை

**திருமங்கலம், ஜூன் 30-**

திருமங்கலம் ரயில்நிலையத்தில் பயணிகளின் கூட்டம் அதிகரித்து வருவதையடுத்து வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்திச் சென்றிடும் வகையில் புதிதாக வாகன காப்பகம் அமைத்திட வேண்டும் என பொதுமக்களும்,ரயில் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரை ஜங்ஷன் ரயில்நிலையத்திற்கு அடுத்தபடியாக அதிகளவு பயணிகள் வந்து செல்லும் ரயில்நிலையங்களில் முதன்மையானதாக திருமங்கலம் ரயில் நிலையம் திகழ்கிறது.

திருமங்கலம் நகர்,கள்ளிக்குடி, திருமங்கலம், கல்லுப்பட்டி,சேடபட்டி யூனியன்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள்,வியாபாரிகள்,மாணவர்கள் மற்றும் ராணுவவீரர்கள் ரயில் பயணம் செய்திடும் கேந்திரமாக திருமங்கலம் ரயில் நிலையம் விளங்குகிறது. இங்கு செயல்பட்டு வரும் கணிணி முன்பதிவு மையத்தில் பயணச்சீட்டு வாங்குவதற்காக அதிகாலை முதலே கூட்டம் நிற்பது வாடிக்கை.

இந்நிலையில் ரயில்பயணம் செய்பவர்கள் மற்றும் கணிணி முன்பதிவு சீட்டு பதிவு செய்திட திருமங்கலம் ரயில் நிலையம் வருவோரது வாகனங்களை பத்திரமாக நிறுத்திட வாகன காப்பக வசதி இல்லாதது பெரும் குறையாக உள்ளது.

இதனிடையே ரயில்களில் ரெகுலராக பயணம் மேற்கொள்வோர் தங்களது வாகனங்களை வாகன காப்பகம் இல்லாததால் ரயில்நிலையத்தின் பல்வேறு பகுதிகளில் நிறுத்திச் செல்கின்றனர்.

சில சமயங்களில் திருமங்கலம் ரயில் நிலையத்திற்கு வருவோரது வாகனங்கள் காணாமல் போய்விடும் சம்பவங்களும் நிகழ்கிறது.எனவே திருமங்கலம் ரயில் நிலையத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு பயணம் மேற்கொள்ள வசதியாக பாதுகாப்பு மிகுந்த கட்டண வாகன காப்பகத்தை உடனடியாக அமைத்திட வேண்டும் என ரயில்வே நிர்வாகத்திற்கு பொதுமக்களும் ரயில் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 150 அரசு பள்ளிகளை தத்தெடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம்: கலெக்டர் ஜி.எஸ்.சமீரன் தலைமையில் நடைபெற்றது




கோவை,ஜூன்.30-

கோயம்புத்தூர் மாவட்டம், பாரதியார் பல்கலைக்கழகத்தில் இன்று(29.06.2022) நான் முதல்வன் திட்டத்தின் கீழ், தமிழக அரசின் சிறப்புத் திட்ட அமலாக்கத்துறையும், பள்ளிக்கல்வித் துறையும் இணைந்து நடத்திய கல்லூரிக் கனவு எனும் தலைப்பில் +2 வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி கலெக்டர் ஜி.எஸ்.சமீரன் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும் 150 அரசுப்பள்ளிகளை தத்தெடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கலெக்டர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் முருகவேல், முதன்மைக் கல்வி அலுவலர் ந.கீதா, விரிவாக்கம் மற்றும் வேலைவழிகாட்டித்துறை தலைவர் மற்றும் பேராசிரியர் அ.விமலா மற்றும் கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணக்கர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் ஜி.எஸ்.சமீரன் இ,.ஆ.ப., தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் கீழ், தமிழக அரசின் சிறப்புத் திட்ட அமலாக்கத்துறையும், பள்ளிக்கல்வித் துறையும் இணைந்து நடத்திய +2 வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான உயர் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி மற்றும் கருத்தரங்கானது மிகவும் பயனுள்ளதாகவும், வாழ்க்கைக்கு வழிகாட்டும் தினமாக இருக்கும்.

அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகியவற்றை சார்ந்த 40 கல்லூரிகள் 150 அரசுப்பள்ளிகளை தத்தெடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் வருகின்ற இரண்டு வருடங்களுக்கு இப்பள்ளிகளை தத்தெடுத்து, பள்ளி மாணவ மாணவர்கள் படிப்பில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும் வெற்றியாளராகும் வகையில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம் தொடர்பாக பல்கலைக்கழகம், கல்லூரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு 10 நாட்களில் பல்வேறு கல்லூரிகள் ஆர்வத்தோடு முன்வந்து, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு பள்ளிகளை கல்லூரிகள் தத்தெடுக்கும். இந்த ஒப்பந்தத்தின் கீழ் சிறப்பாக பணியாற்றிய கல்லூரிகளுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. மிகவும் சிறப்பாக செயல்படும் கல்லூரியினை தமிழ்நாடு முதலமைச்சர் பாராட்டுகள் பெற வாய்ப்பு உள்ளது. இன்றைய பள்ளி மாணக்கர்கள் தான் நாளைய கல்லூரி மாணக்கர்கள். எனவே, பள்ளியிலே அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல், பயிற்சிகள் வழங்கும்போது வருங்காலத்தில் திறமையான மாணக்கர்களை உருவாக்க முடியும். இந்த ஒப்பந்தத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கலைக் கல்லூரிகள், என்ஜினியரிங் கல்லூரிகள், உள்ளிட்ட பல்வேறு கல்லூரிகள் பங்கு கொண்டுள்ளனர். இக்கல்லூரிகளின் செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வு மேற்கொள்ளப்படும். வருகின்ற நாட்களில் இன்னும் கூடுதலான கல்லூரிகள் இந்த ஒப்பந்தத்தில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனார்.

நான் முதல்வன் திட்டத்தின் கீழ், போலாம் ரைட், 9 ஆம் மற்றும் 11 ஆம் வகுப்பு மாணக்கர்களுக்கு, கல்லூரி, அறிவியல் பொருட்காட்சி, அறிவியல் கல்லூரி உள்ளிட்ட இடங்களுக்கு அழைத்து சென்று, மாவட்ட ஆட்சித்தலைவரும் அவர்களுடன் கலந்துகொண்டு உரையாடும் நிகழ்ச்சி இது வரை 7 முறை நடைபெற்றுள்ளது. மேலும், மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணக்கர்களுக்கு பயன்படும் வகையில் கனவு மெய்ப்படவேண்டும் என்ற திட்டம் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்டு, துவக்கி வைத்தனர். அதன் ஒருபகுதியாக அரசுப்பள்ளிகளை தத்தெடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் அரசுப் பள்ளிகளை தத்தெடுக்கும் திட்டத்தினை நமது மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்த வேண்டும். வேறு எந்த மாவட்டத்திலும் இந்த மாதிரி ஒரு முயற்சி எடுக்கப்படவில்லை. பிற மாவட்டங்களுக்கு முன்னோடி நம் மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக தொடங்கப்பட்டுள்ளது. கல்வி, மருத்துவம், தொழில்முனைவோர்களின் தொலைநோக்கு பார்வை என பல்வேறு வகையில் எப்பவும், கோயம்புத்தூர் மாவட்டம் முன்மாதிரி மாவட்டமாக திகழ்கின்றது. அந்த வகையில் இந்த திட்டத்திலும், சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. என கலெக்டர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, உயர்கல்வி, போட்டி தேர்வுகள், தொடர்பாக பள்ளி மாணவ மாணவியர்களின் வினாக்களுக்கு கலெக்டர் விளக்கத்தை கூறி அவர்களுடன் கலந்துரையடினார்.

மாணவ மாணவியர்கள் உயர்கல்வி பயில கல்விக்கடன் பெறுவதற்கான வழிமுறைகள் தொடர்பாக விளக்கம் அளிக்கும் வகையில் தேசிய மயமாக்கப்பட்ட முன்னனி வங்கிகள் மூலம் அரங்குகள் அமைப்பட்டிருந்தன. அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பாரதியார் பல்கலைக்கழகம், வேளாண்மை பல்கலைக்கழகத்தை சார்ந்த 40 கல்லூரிகள் 150 அரசுப்பள்ளிகளை தத்தெடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாயிலாக பள்ளி மாணவ மாணவியர்கள் படிப்பில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும், வெற்றியாளராகும் வகையில் வழிகாட்டுதல், திறன் மேம்பாட்டு -பயிற்சி அளித்தல், மாணவர்களின் திறன் மற்றும் சிறப்புத் திறனறிதல் (சைகைட்டரிக் அஸ்ஸ்மெண்ட், மாணவரின் தனித்திறமைகளை அடையாளம் கண்டு அதனை மேலும் ஊக்குவித்தல், விளையாட்டு, கலை, அறிவியல், கைத்தொழில், பிற மாணவர்களின் திறன் மற்றும் வேலைவாயப்பு மேம்பாட்டிற்கான கூடுதல் திறன் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப நிறுவன மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல், மாணவர்களைக் கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக அழைத்துச் சென்று பயன்முகச் சூழலை அறிமுகப்படுத்துதல், கல்லூரி ஆசிரியர்களைப் பள்ளிக்கு வரவழைத்துப் பயிற்சி அளித்தல், கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் தேசிய மாணவர் படை மூலம் பள்ளிப் பயிற்சி அளித்தல், நேர்முகத் தேர்வு தயாராவது குறித்து பயிற்சி அளித்தல், துறைவாரியாக சிறந்த சாதனையாளர்கள் வாயிலாகத் தொழில் முனைவோருக்கான சிறப்பு வகுப்புகள் நடத்துதல், ஆரோக்கியமான உடல் மற்றும் மன நலத்திற்கு தேவையான ஆலோசனைகள் அதற்கு உண்டான சிறப்பு பயிற்சியாளரைக் கொண்டு பயிற்சிஅளித்தல், தமிழ்பண்பாடு மரபு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு நேரடிப் பயிற்சி, இணைய வழி பயிற்சி அளித்தல், பள்ளியில் சிறப்பு பயிற்சியாளர்களைக் கொண்டு வழிகாட்டி ஆலோசனை மையம் உருவாக்குதல், உள்ளிட்ட பல்வேறு கட்ட ஆலோசனைகள், வழிகாட்டுதல் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும்.

# மசினகுடி கோட்ட அலுவலகத்தில் வெளிப்படைத் தன்மை அமர்வு நாளை நடக்கிறது

ஊட்டி,ஜூன்.-30-

மசினகுடி கோட்ட அலுவலகத்தில் வெளிப்படைத் தன்மை அமர்வு நாளை நடக்கிறது. இது குறித்து துணை இயக்குநர் அருண்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

ஊட்டியில் உள்ள முதுமலை புலிகள் காப்பக மசினகுடி கோட்ட அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் 1-ந் தேதி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தும் அலுவலகங்களுடன் வெளிப்படைத்தன்மை அமர்வு நடத்தப்படும். 1-ந் தேதி விடுமுறை என்றால் அடுத்த அலுவலக வேலை நாளில் கலந்தாய்வு நடத்தப்படும். பல்வேறு துறைகளில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் திட்ட ஆதரவாளர்கள் துணை இயக்குநர், முதுமலை புலிகள் காப்பகம், ஊட்டியில் திட்ட பிரேரணை ஏதேனும் இருப்பின் அனைத்து விவரங்களுடன் அமர்வில் கலந்து கொள்ளலாம. இவ்வாறு துணை இயக்குநர் பி.அருண்குமார் தெரிவித்துள்ளார்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# பொன்னேரி டாக்டர் ஜெயலலிதா மீன்வள பல்கலைக் கழகத்தில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆய்வு



பொன்னேரி ஜூன்-30

திருவள்ளூர் மாவட்டம் ,பொன்னேரியில் இயங்கி வரும் டாக்டர் ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தின் எம்ஜிஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் மாண்புமிகு தமிழ்நாடு மீன்வளத்துறை மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பல்கலைக்கழகத்தில் நம் நாட்டு அலங்கார மீன் இனப் பெருக்கம் மற்றும் வளர்ப்பு மீன் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சியினை துவக்கி வைத்து அதற்கான நூல்களை வெளி யிட் டார்.பின் னர் ஆராய்ச்சி நிறுவனத்தில் வளர்க்கப்படும் வண்ண மீன்கள் மற்றும் பல்வேறு வகையான வளர்ப்பு மீன்கள் குறித்து மாதிரி பண்ணைகளில் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு மீன் குஞ்சுகளை அந்த பண்ணைகளில் வளர்ப்பிறகாக விட்டார்.கல்லூரி வளாகத்தில் மரச் செடிகளை நட்டபின் செய்தியாளர் பற்றி பேசிய அமைச்சர் தமிழகத்தில் அலங்கார மீன்களை வளர்ப்பது மட்டுமின்றி வண்ண மீன்களை தமிழகத்தில் வளர்த்து அன்னிய செலாவணி ஈட்ட வேண்டும் என்ற அடிப்படையில் மீன் வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படுவதாகவும்,பழவேற்காட்டில் விரைவில் சிறு துறைமுகம் அமைக்கப்படும் என்றும் அதற்காக வனத்துறையினரிடம் அனுமதி பெறும் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும், அனுமதி பெறாத இறால் வளர்ப்பு பண்ணைகள் மீது ஆய்வு செய்து அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.இந்த நிகழ்வில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராசன்,பொன்னேரி நகர்மன்ற தலைவர் டாக்டர். பரிமளம் விஸ்வநாதன்,மீஞ்சூர் ஒன்றியக் குழுத் தலைவர் ரவி, பொன்னேரி மீன்வளத்துறை உதவி இயக்குனர் வேலன்,திமுக நிர்வாகிகள் மீஞ்சூர் வடக்கு சுகுமாரன்,சோழவரம் வடக்கு செல்வசேகரன்,கும்மிடிப்பூண்டி மணிபாலன்,ஆரம்பாக்கம் ஆறுமுகம்,ஆரணி அன்புவாணன்,கோளூர் கதிரவன்,கும்மிடிப்பூண்டி எல்.ரமேஷ்,பழவை முகம்மது அலவி,அரங்கம் ஜெயபால் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.




**கருணாநிதியின் 99 வது பிறந்த நாள் மற்றும் திமுக அரசின் ஒராண்டு சாதனை பொது கூட்டம் வானகரம் அருகே மேட்டுகுப்பம் பகுதியில் வில்லிவாக்கம் ஒன்றிய உறுப்பினர் ஜெ.ஜெயசுதா ஏற்பாட்டில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ சிற்ப்புரையாற்றி ஏழை எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கினார்.உடன் துரைவீரமணி, சைதை சாதிக், நவீன்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.**

# சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4 மணிநேரத்தில் 50,000 முகக்கவசங்கள் வழங்கும் விழிப்புணர்வு இயக்கம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்

சென்னை,ஜூன்.30

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பாக, 4 மணிநேரத்தில் 50,000 முகக்கவசங்கள் வழங்கும் விழிப்புணர்வு இயக்கத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் (29.06.2022) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-123க்குட்பட்ட மயிலாப்பூர் லஸ் கார்னர் சந்திப்பில் பொதுமக்களுக்கு முகக்கவசங்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, அமைச்சர் பொதுமக்களுக்கு முகக்கவசங்கள் மற்றும் துண்டுபிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது :உலகம் முழுவதிலும் கோவிட் தொற்றின் பாதிப்பு அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டில் கோவிட் தொற்றின் பாதிப்பு தற்பொழுது வேகமாக பரவி வருகிறது. தமிழ்நாட்டில் நேற்று (28.06.2022) ஒரு நாளில் 1,484 நபர்களுக்கு கோவிட் தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இன்றும் நேற்றைய தொற்று பாதிப்பை விட சற்று கூடுதலாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் மட்டுமில்லாமல் கேரளா, மத்தியப் பிரதேசம், மஹாராஷ்ட்ரா, கர்நாடகா, ஹரியானா, டெல்லி போன்ற பல்வேறு மாநிலங்களில் தொடர்ந்து தொற்று பாதிப்பு அதிகரித்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் 15க்கும் மேற்பட்ட மாநிலங்களில் தொற்றின் எண்ணிக்கை 1000யை கடந்துள்ளது. உலகில் 10 நாடுகளுக்கும் மேலாக கடந்த 24 மணிநேரத்தில் 5000 தொடங்கி 1 இலட்சம் வரை தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இன்று காலை வரை 8,970 நபர்களுக்கு கோவிட் தொற்று பாதித்து சிகிச்சையில் உள்ளனர். இதில் சென்னையில் மட்டும் 3,869 நபர்கள் தொற்று பாதித்து சிகிச்சையில் உள்ளனர். கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட 8,970 நபர்களில் 95 சதவீதம் நபர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்களின் தொடர் கண்காணிப்பில் உள்ளனர். இதில் 5 சதவீதம் நபர்கள் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு பாதுகாப்பான நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.



தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் பதிவான 1,484 கோவிட் தொற்று பாதிப்பில் சென்னையில் மட்டுமே 632 நபர்களுக்கு தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சென்னைக்கு அடுத்தபடியாக செங்கல்பட்டில் 239 நபர்களுக்கும், அடுத்ததாக கோவை என தொற்றின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எனவே, இந்தத் தொற்று பரவலை தடுப்பதற்கும், குறைப்பதற்கும், கோவிட் தொற்று இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கும் முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நாள்தோறும் செயலாளர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் அந்தந்த தொகுதிகளில் கோவிட் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் களஆய்வுகள் மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற மருத்துவச் சிகிச்சைகள் குறித்தும், அவர்களோடு தொடர்பில் இருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றோம்.

முதலமைச்சர் கோவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்த முகக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தி பல்வேறு வகைகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார்கள். இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அண்ணா சாலையில் நடந்தே சென்று பொதுமக்களுக்கு முகக்கவசங்களை அணிவித்தும், வழங்கியும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் வாகனப் பிரச்சாரங்கள், பல்வேறு கலைக்குழுக்கள் மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு முகக்கவசங்கள் அணிவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து புதிய நிகழ்வாக (29.06.2022) சென்னை மயிலாப்பூர் லஸ் கார்னரில் 4 சாலைகளும் சந்திக்கும் இடத்தில் மாண்புமிகு மேயர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், துறையின் செயலாளர் மற்றும் பொதுசுகாதாரத்துறை இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள், மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர், மண்டலக்குழுத் தலைவர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரோடும் இணைந்து 4 மணிநேரம் தொடர்ந்து 50,000க்கும் மேற்பட்ட முகக்கவசங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

ஏறத்தாழ 67,500 முகக்கவசங்கள் தற்பொழுது கையிருப்பில் உள்ளன. இந்த முகக்கவசங்கள் அனைத்தையும் பொதுமக்களுக்கு இன்று 1 மணி வரை வழங்குவதற்கு ஏதுவாக மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள் 100 நபர்கள் உட்பட துறையின் அலுவலர்கள், தன்னார்வலர்கள் என 150 நபர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிகழ்வின் மூலம் பொதுமக்களுக்கு முகக்கவசங்கள் வழங்கியும், முகக்கவசம் அணிவதன் அவசியம் குறித்த துண்டுபிரசுரங்களை வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், இந்த முகக்கவசங்கள் தான் நீங்கள் வாழ்நாள் முழுவதும் அணிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தரப்படுபவை அல்ல. முகக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்துகிற ஒரு நிகழ்விற்காக தரப்படுகிற முகக்கவசம். இதனை மனதில் வைத்துக் கொண்டு அனைவரும் தொடர்ச்சியாக முகக்கவசங்களை அணிந்து இந்தத் தொற்று பரவலை தடுப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, வருகிற 10ம் தேதி தமிழ்நாட்டில் 31வது கோவிட் மெகா தடுப்பூசி சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. ஏற்கனவே நடைபெற்ற 30 மெகா தடுப்பூசி சிறப்பு முகாம்களில் 28 மெகா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் தலா 50,000 இடங்களிலும், 2 மெகா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் தலா 1 இலட்சம் இடங்களிலும் நடைபெற்றது. இதே போல் 10ம் தேதி நடைபெற உள்ள 31வது கோவிட் மெகா தடுப்பூசி சிறப்பு முகாமும் ஒரு லட்சம் இடங்களில் நடைபெற உள்ளது. சென்னையில் 3,000 இடங்களில் மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

கோவிட் தடுப்பூசி முதல் தவணை செலுத்தி கொள்ளாத 38,22,687 நபர்கள், இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தி கொள்ளாத 1,10,12,627 நபர்கள் என மொத்தம் 1,48,34,314 நபர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயித்து இந்த முகாம்கள் நடத்தப்பட உள்ளன. மேலும், பொதுமக்கள் 10ம் தேதி வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவனைகளிலும் இலவசமாக தடுப்பூசி செலுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மக்கள் நல்வாழ்வுத்துறையின் இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் உறுதுணையாக இருந்து அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் ஆர். பிரியா அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர்.த.வேலு துணை மேயர். மு.மகேஷ் குமார், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், லைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்த குமாரி அவர்கள், மண்டலக்குழுத் தலைவர்.எஸ்.மதன்மோகன் அவர்கள், இணை ஆணையாளர் (சுகாதாரம்) .சங்கர்லால் குமாவாத், , பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் மற்றும் மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

IN THE COURT OF THE DISTRICT MUNSIF, COONOOR.
I.A.No 1/2020 in
I.A.No 2/2020 in
I.A.No 3/2020 in
O.S.No 26/2016

I.Basavaraj ... Petitioner/Plaintiff
Vs
R.Basavaraj (SINCE DECEASED) & Others ...Respondents/Defendants

NOTICE TO RESPONDENTS 9 and 10

To
i) Smt.Saranya D/o Late B.Balasubramani, W/o Ranjith, Mel-Odayaratty Village, Kollimalai Post, The Nilgiris.
ii) Mr.B.Vijayakumar S/o Late Balasubramani , Mel-Odayaratty Village, Kollimalai Post, The Nilgiris,

Please take notice that the above named Petitioner/Plaintiff has filed 3 applications Under section 5 of Limitation Act, under order 22 Rule 9 C.P.C and under order 22 Rule 4 CPC respectively and the same has been numbered as I.A.No 1/2020, I.A.No 2/2020 and I.A.No 3/2020 respectively and the same stands posted on 8-7-2022 at 10: 30 A.M., for your appearance. You are hereby called upon to appear in person or by a pleader on the date and time mentioned above failing which the case will be decided in your absence.

( By Order)
ADVOCATES FOR THE PLAINTIFF
B.Sugumaran B.Sc., LL.B.,
K.Chandru B.Com., LL.B.,
H.Nanthakumar B.A., LL.B.,
Coonoor-2.

# ஊட்டியில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட வணிக வளாகத்திற்கு சீல்

## நகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை

ஊட்டி, ஜூன்.30-

ஊட்டியில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட தனியார் வணிக வளாகத்திற்கு நகராட்சி அதிகாரிகள் சீல் வைத்தனர். இது குறித்த விவரமாவது-

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுச் சூழல் பாதிப்பை தடுக்கவும், எதிர்காலத்தில் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையிலும் கட்டிடங்கள் கட்ட பல்வேறு விதிமுறைகள் உள்ளன. குறிப்பாக, 1993-ம் ஆண்டு மாஸ்டர் பிளான் சட்டப்படி 7 மீட்டருக்கு மேல் கட்டிடங்கள் கட்டவும், 30 டிகிரி சரிவான பகுதிகளில் கட்டிடங்கள் கட்டவும் தடை விதிக்கப்பட்டது.

இதன் பின்னர் நீலகிரி மாவட்டத்தில் புதிதாக கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்றால் நகராட்சி நிர்வாகத்தில் மட்டும் அல்லாமல் வனத்துறை, புவியியல் துறை, வேளாண் பொறியியல் துறை உள்பட பல்வேறு துறைகளில் அனுமதி வாங்க வேண்டும் என்ற நடைமுறை உள்ளது.

இவ்வாறு கட்டிடங்கள் கட்ட விதிமுறைகள் அதிகமாக இருப்பதால் அதை பின்பற்றாமல் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு கட்டிங்கள் கட்டப்பட்டன. இதன்படி 1993-ம் ஆண்டுக்கு பிறகு விதிமுறைகளை மீறி 1337 கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளதாக கணக்கெடுக்கப்பட்டது. இவ்வாறு விதிமுறை மீறி கட்டப்பட்ட பல கட்டிடங்கள் சீல் வைக்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த 1999-ம் ஆண்டு கேசினோ சந்திப்பு பகுதியில் விதிமுறைகளை மீறி 3 தளங்களுடன் தனியார் வணிக வளாகம் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்தினர் அந்தக் கட்டிடத்திற்கு சீல் வைக்க நடவடிக்கை எடுத்தனர்.

ஆனால் தனியார் வணிக வளாகத்தினர் இதுகுறித்து சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கு விசாரணை முடிந்து கடந்த மாதம் தீர்ப்பு கூறப்பட்டது. இதில் விதிமுறை மீறி கட்டப்பட்ட வணிக வளாக கட்டிடத்தை இடிக்க சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதுகுறித்து நகராட்சி நிர்வாகம் சார்பில் கடந்த மாதம் வணிக வளாக உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனாலும் வணிக வளாகம் இதுவரை காலி செய் யப் ப ட வில் லை. இதைத்தொடர்ந்து நேற்று வணிக வளாகத்திற்கு சீல் வைக்க நகராட்சி ஆணையாளர் காந்திராஜன் உத்தரவின் பேரில் நகரமைப்பு திட்ட அதிகாரி ஜெயவேல், நகர அமைப்பு திட்ட ஆய்வாளர்; மீனாட்சி தலைமையில் அதிகாரிகள் வந்தனர்.

இதற்கிடையே வணிக வளாகத்தின் 3-வது தளத்தில் தற்போது வழிபாட்டுத்தலம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதனால் வழிபாட்டுத்தலத்திற்கு தகவல் பரவியதால் பொதுமக்கள் ஏராளமானோர் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து போலீஸ் துணை சூப்பிரண்டு மகேஸ்வரன், இன்ஸ்பெக்டர்கள் பிலிப், செந்தில் குமார் ஆகியோர் தலைமையில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் நகராட்சி நிர்வாகம் சார்பில் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் வணிக வளாகத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள கடைகள் மற்றும் அலுவலகங்களுக்கு மட்டும் சீல் வைக்கப்படும், வழிபாட்டு தளத்திற்கு சீல் வைக்கப்படாது என்றும் நகராட்சி நிர்வாகம் சார்பில் உறுதியளிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் சமாதானம் அடைந்தனர். இதை தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்தினர் வணிக வளாகத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் இருந்த கடைகளுக்கு சீல் வைத்து நோட்டீஸ் ஒட்டினர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம் சிறுவலூர் ஊராட்சி கிராம நிர்வாக அலுவலகத்தில் கலெக்டர் கிருஷ்ணனுண்ணி ஆய்வு மேற்கொண்டார்.

# ஊட்டி ஜமாபந்தி நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்: கலெக்டர் சா.ப.அம்ரித் வழங்கினார்



**ஊட்டி, ஜூன்.30-**

ஊட்டி ஜமாபந்தி நிகழ்ச்சியில் 15 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் சா.ப.அம்ரித் வழங்கினார்

நீலகிரி மாவட்டம், ஊட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று (29.06.2022) இரண்டாவது நாளாக வருவாய் தீர்வாய நிகழ்ச்சி மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலெக்டர் கலந்து கொண்டு, 02 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளையும், 13 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு என மொத்தம் 15 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இன்று நடைபெற்ற வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 123 மனுக்களை பெற்றுக் கொண்டு, அம்மனுக்கள்மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தனி கவனம் செலுத்தி, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து; சோலூர் உள்வட்டத்திற்குட்பட்ட மசினகுடி, கடநாடு - 1, கடநாடு - 2, உல்லத்தி, சோலூர் மற்றும் நடுவட்டம் ஆகிய கிராமங்களில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

மேலும் இன்று குன்னூர் வட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலும், கோத்தகிரி வட்டத்தில் குன்னூர் சார் ஆட்சியர் தலைமையிலும், பந்தலூர் வட்டத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தலைமையிலும், குந்தா வட்டத்தில் உதகை வருவாய் கோட்டாட்சியர் தலைமையிலும், கூடலூர் வட்டத்தில் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர்கள் தலைமையிலும் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சி நடைபெற்றது.

இந் நி கழ் வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) முகமது குதரதுல்லா, ஊட்டி வட்டாட்சியர் ராஜசேகர், தனி வட்டாட்சியர் (ச.பா.தி) குமாரராஜா, வட்ட வழங்கல் அலுவலர் சங்கர்கணேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ஊட்டி அரசு கலைக்கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சினை மாணவர்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

கோவை மாவட்டத்தில்

# சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்தில் மின்மோட்டார் பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம்

## கலெக்டர் சமீரன் தகவல்

**கோவை ஜூன்.30-**

கோயம்புத்தூர் மாவட்ட சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அரசு மானியத்துடன் திறன் குறைந்த பழைய மின் மோட்டாரை மாற்றி புதிய மின் மோட்டார் பம்ப் செட்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலத்தடி நீரை பயன்படுத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உதவும் வகையில் மூன்று ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள புதிய மின் இணைப்பு பெற்றுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகபட்சம் 10 குதிரைத்திறன் வரை புதிய மின்மோட்டார் பம்ப் செட் பெறவும், பழுதான மற்றும் திறன் குறைந்த பழைய பம்பு செட்டை மாற்றிடவும் 10 ஆயிரம் வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 31 எண்கள் தலா ரூ.10000 வீதம் ரூ.3.10 இலட்சத்தில் மின்மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்து தரப்படும். மேலும் இத்திட்டம் தொடர்பாக முழு விபரங்களை பெற்றிட கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் கீழ்காணும் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களை அணுகுமாறு கோயம்புத்தூர் கலெக்டர் தெரிவித்துள்ளார். 1)செயற்பொறியாளர் (வே பொ) அலுவலகம், தடாகம் ரோடு, ஜி.சி.டி, அஞ்சல், கோயம்புத்தூர் - 641013,

2)உதவி செயற்பொறியாளர் (வே பொ) அலுவலகம், தடாகம் ரோடு, ஜி.சி.டி, அஞ்சல், கோயம்புத்தூர் - 641013,3) உதவி செயற்பொறியாளர் (வே பொ) அலுவலகம், ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகம், மீன்கரை ரோடு, பொள்ளாச்சி - 642 001 தொலைபேசி எண்கள் 0422-2434838, 0422-2966500 04259-292271.



ஈரோட்டில் நடந்த மாநில அளவிலான போட்டியில்.ஈரோடு ஜீத்தோ கு காய் கராத்தே பயிற்சி பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு ஓவர் ஆல் சேம்பியன் வென்று மாவட்டத்திலேமுதலிடம்பிடித்தனர்.பயிற்சியாளயர்கள்கே.எம்சந்திரசேகர்கராத்தேமாஸ்டர் ஏ.சக்திவேல். மாநில துணை செயலாளர் மற்றும் தமிழ்நாடு ஜித்தோகு காய்மாநில துணை செயலாளர் ஈரோடு மாவட்ட ஸ்போர்ட்ஸ் கராத்தே சங்க செயலாளர் ஆகியோர் பாராட்டி வாழ்த்தினர்.

ஈரோடு மாவட்டம்

# கோபிசெட்டிபாளையம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.3.23 கோடி மதிப்பில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகள்

## அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார்



**ஈரோடு,ஜூன்.30-**

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் மற்றும் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் கலெக்டர் ஹெச்.கி ருஷ் ண னுண்ணி இஆப., தலைமையில், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி ரூ.3.23 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய வளர்ச்சித் திட்டப்பணியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியால், பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், ஈரோடு மாவட்டத்தில் பல திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு அரசின் அனுமதி வழங் கப் பட் டுள் ளது. அதனை சிறப்பாக செயல்படுத்துகின்ற சூழ்நிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள். இந்த ஓராண்டு காலகட்டத்தில் பல்வேறு திட்டங்கள் துவக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அத்திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பல திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் பல திட்டங்கள் துவக்குவதற்கான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகிறது. ஏறத்தாழ 85 திட்டங்களை வகுத்து அதனை செயல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்போது மேலும் பல திட்டங்கள் புதிதாக சேர்க்கப்படவுள்ளது.

எனவே நம்முடைய மாவட்டத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் மக்களுடைய வசதி இதனை கருத்தில் கொண்டும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எதிர்பார்பிற்கிணங்க, தொடர்ந்து மாவட்ட நிர்வாகமும், கலெக்டர் அவர்களும் மற்ற அதிகாரிகளும் விரைந்து பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையில், இன்றைய தினம் கோபிசெட்டிபாளையம் மற்றும் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.3.23 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை திறந்து வைக்கப்பட்டு, புதிய வளர்ச்சித் திட்டப்பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம், மணியகாரன்புதூரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழ் ரூ.36.46 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் ஆய்வகம் மற்றும் நூலக கட்டிடம், சிறுவலூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியாக ரூ.10.75 இலட்சம் என ரூ.70.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம், கொளப்பலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 நம்பியூர் சாலை பகுதியில் 15-வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுவர் பூங்கா மற்றும் கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.2 ராமர் விரிவாக்க பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா என மொத்தம் ரூ.1.66 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற புதிய திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், கூச்சிக்கல்லூர் குறிச்சி பிரிவு அருகில் தனியார் இடத்தில் புதிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பூனாச்சி ஊராட்சி செம்படாம்பாளையம் சாலை முதல் நத்தமேடு சாலை வரை சித்தார் ஓடை பள்ளம் குறுக்கே நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.57 கோடி மதிப்பீட்டில் மேல்மட்டபாலம் அமைக்கும் பணியினை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, ஒவ்வொரு மாதமும் இப்பணிகள் முன்னேற்றம் குறித்து கலெக்டர் ஆய்வு செய்து வருகிறார்கள். மேலும், அமைச்சர் பெருமக்களும் ஆய்வு மேற்கொண்டு, கூடுதலாக அரசின் மூலம் தேவைப்படும் நிதி மற்றும் அனுமதியினை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறோம். எனவே தொடர்ந்து இந்த பணிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைபடி மேற்கொள்ளப்படும். அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் தற்பொழுது, பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பட்டா வழங்குதல், கட்டிய வீடுகளுக்கு ஒதுக்கீடு வழங்குதல் மற்றும் கூடுதலாக தேவைப்படும் வீடுகள் குறித்து கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் வீடுகள் ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படும் என தெரிவித்தார். தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் பொது மக் க ளி ட மி ருந்து அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகள் வேண்டுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், கோபி செட்டிபாளையம் நகர்மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், கொளப்பலூர் பேரூராட்சி தலைவர் அன்பரசு, கோபி செட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் பிரேம் ஆனந்த், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) சுந்தரமூர்த்தி, நகராட்சி பொறியாளர் சுப்பிரமணி, கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் மஞ்சுநாத், வட்டாட்சியர்கள் ஆயிஷா (கோபிசெட்டிபாளையம்), விஜயகுமார் (அந்தியூர்), முத்துகிருஷ்ணன் (பவானி) மற்றும் கோபிசெட்டிபாளையம் மற்றும் அம்மாபேட்டை வட்டார வளர்ச்சி அலவலர்கள் உட்பட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க தலைவர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

நெடுகல்கோம்பை கிராமத்தில்

# பழங்குடியின மக்களுக்கான பாலின உணர்வு மற்றும் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு நிகழ்ச்சி



**ஊட்டி, ஜூன்.30-**

ஜெ.எஸ்.எஸ் பார்மசி கல்லூரி சார்பில் கிராமப்புற மற்றும் பழங்குடியின மக்களுக்கான பாலின உணர்வு மற்றும் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு நிகழ்ச்சி நெடுகல்கோம்பை கிராமத்தில் நடைபெற்றது. புதுடெல்லியிலுள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில், மைசூரு ஜே எஸ் எஸ் உயர்க்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நீலகிரி இந்திய மருந்து சங்கம் மற்றும் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்டம் இணைந்து நீலகிரி மாவட்டத்தில் உள்ள கிராமப்புற மற்றும் பழங்குடியின மக்களுக்கான பாலின உணர்வு மற்றும் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு குறித்த இரண்டு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நெடுகல்கோம்பை கிராமத்தில் நடைபெற்றது .இந்த நிகழ்ச்சிக்கு ஜே எஸ் எஸ் பார்மசி கல்லூரி மருந்து வேதியியல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்சியில் இணைப் பேராசிரியர் கௌரம்மா வரவேற்புரை வழங்கினார். இந்த நிகழ்ச்சி உருவான விதம் குறித்து துறையின் தலைவரும் இணை பேராசிரியருமான முனைவர் ஆர் காளிராஜன் எடுத்துரைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ் பி தனபால் தலைமை உரையாற்றினார். முனைவர் மதுசூதனன் புரோகித் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்

இரண்டு நாள் நடைபெரும் இந்த விழிப்புணரர்வு நிகழ்ச்சியில் சென்னை அடையாறு மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பயோடெக்னாலஜி பிரிவு மூத்த விஞ்ஞானி என். அய்யாதுரை, கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின், மகளிர் ஆய்வுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கமலவேணி, சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் பிருந்தா சுரேஷ், கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் பி. பாபு, பேராசிரியர் டாக்டர் வடிவேலன், உதவி பேராசிரியர் சி. ஜெயக்குமார் ஆகியோர் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டு நிகழ்ச்சி தலைப்பின் சார்பாக பேசினார். விரிவுரையாளர் முனைவர் ஸ்ரீகாந்த் ஜூபுடி நன்றி உரை நல்கினார். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோமதி சுவாமிநாதன் ஏற்பாடு செய்து தொகுத்து வழங்கினார்

# பா.ஜ.க.ஆலோசனை கூட்டம்

**ஈரோடு, ஜூன்.30-**

பா.ஜ.க. விவசாய பிரிவு ஆலோசனை கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்ட கட்சி அலுவலகத்தில் நேற்று நடந்தது.

கூட்டத்துக்கு மாவட்ட தலைவர் எஸ்.டி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். மொடக்குறிச்சி சரஸ்வதி எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கட்சியின் விவசாய பிரிவு மாநில தலைவர் ஜி.கே.நாகராஜ் கலந்து கொண்டு பேசினார். முன்னதாக அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:-

கீழ்பவானி வாய்க்காலில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு தரப்பு விவசாயிகள் ஆதரவும், மற்றொரு தரப்பு விவசாயிகள் எதிர்ப்பும் தெரிவித்து வருகிறார்கள். எனவே கடைமடை பகுதி வரை தண்ணீர் செல்கிறதா? பாசன சபையில் அனைத்து விவசாயிகளும் உள்ளனரா? உள்ளிட்டவற்றை கண்டறிய பா.ஜ.க. சார்பில் ஆய்வு பணிகள் தொடங்கப்பட உள்ளது. 5 கட்டங்களாக ஆய்வு நடத்தப்படுகிறது.

தேசிய பசுமை தீர்ப்பாயம் சார்பில் வருகிற ஜூலை மாதம் 25-ந் தேதி வரை பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்று கூறப்பட்டு உள்ளதால், அதற்குள் ஆய்வுகளை செய்து முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்படும். தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்த போது கீழ்பவானி வாய்க்கால் சீரமைப்பு பணிக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், ஆட்சிக்கு வந்ததும் ஆய்வுக் குழு அமைக்கப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால் ஆய்வுக்குழு எதுவும் அமைக்கப்படாமல் திட்டம் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதால் தி.மு.க.வினர் முறைகேட்டில் ஈடுபட வாய்ப்பு உள்ளது.

நாங்கள் மேற்கொள்ளும் ஆய்வில் இருதரப்பு விவசாயிகளையும் சந்தித்து தங்களது கோரிக்கைகளையும், கருத்துகளையும் கேட்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் ஈஸ்வரமூர்த்தி, லோகேஷ், பன்னீர்செல்வம், சந்திரசேகரன், ஈஸ்வரமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

ஈரோடு மாவட்டத்தில்

# ஆற்றல் அறக்கட்டளை சார்பில் 2 அரசுப் பள்ளிகள் சீரமைக்கப்பட்டு ஒப்படைப்பு



**ஈரோடு ஜூன்30**

ஈரோடு மாநகராட்சிக்குள்பட்ட திண்டல் மாநகராட்சித் தொடக்கப் பள்ளியில் வகுப்பறைக் கட்டடம் சீரமைத்தல், வகுப்பறைக்கு டைல்ஸ் தரைத்தளம் அமைத்தல் மற்றும் மாணவியர் கழிவறையை சீரமைத்தல் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் ஆற்றல் அறக்கட்டளை சார்பில் மேற்கொள்ளப்பட்டது.பணிகள் நிறைவடைந்த நிலையில் பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கும் நிகழ்வு அறக்கட்டளைத் தலைவர் அசோக்குமார் முன்னிலையில் நடந்தது. மேயர் சு.நாகரத்தினம், கவுன்சிலர் கீர்த்தனா, பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் ஜோதிமணி, வட்டார கல்வி அலுவலர் சந்தியா, தலைமையாசிரியர் புனிதவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கொடுமுடி பேரூராட்சி நகப்பாளையம் அரசு ஆரம்பப் பள்ளியின் கட்டடம் சீரமைத்து பழுது நீக்கி புதுப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளியை ஒப்படைக்கும் நிகழ்வுக்கு கொடுமுடி பேரூராட்சித் தலைவர் திலகவதி, துணைத் தலைவர் ராஜகமலஹாசன், தலைமை ஆசிரியர் இளங்கோ, உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் கமலா, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் மணி மற்றும் பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் கஸ்தூரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.ஆற்றல் அறக்கட்டளை இதுவரை 54 பள்ளிகள் சீரமைத்து ஒப்படைத்துள்ளது என அதன் தலைவர் அசோக்குமார் தெரிவித்தார்

# கொரோனாவால் நிறுத்தப்பட்ட ஈரோடு -திருச்சி பயணிகள் ரெயில் மீண்டும் இயக்கம்

**ஈரோடு ஜூன் 30-**

ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவரும், ரெயில்வே ஆலோசனைக்குழு முன்னாள் உறுப்பினருமான கே.என்.பாஷா வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:- ஈரோடு ரெயில் நிலையத்தில் இருந்து திருச்சிக்கு தினசரி பயணிகள் ரெயில் இயங்கி வந்தது. கொரோனா பெருந்தொற்று காரணமாக இந்த ரெயில் நிறுத்தப்பட்டது. பின்னர் சகஜ நிலை ஏற்பட்டும் ஈரோடு- திருச்சி பயணிகள் ரெயில் இயக்கப்படவில்லை. இந்த ரெயிலை நம்பி பயணம் செய்யும் ஆயிரக்கணக்கான மக்களின் நலன் கருதி மீண்டும் ஈரோடு- திருச்சி, திருச்சி- ஈரோடு பயணிகள் ரெயிலை இயக்க வேண்டும் என்று ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் பலமுறை கோரிக்கை வைக்கப்பட்டது. ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. காங்கிரஸ் கட்சியினரின் தொடர் போராட்டம் காரணமாக ஈரோடு- திருச்சி ரெயில் வருகிற ஜூலை மாதம் 9-ந் தேதி முதல் இயக்கப்படும் என்று தெற்கு ரெயில்வே அறிவித்து உள்ளது. அதன்படி 9-7-2022 முதல் தினசரி காலை 8.10 மணிக்கு புறப்படும் ரெயில் சாவடிப்பாளையம், பாசூர், கரூர் வழியாக திருச்சி மலைக் கோட்டை ரெயில் நிலையத்தை பகல் 12 மணிக்கு சென்று அடைகிறது. இதுபோல் மாலை 4.35 மணிக்கு புறப்படும் ரெயில் இரவு 8.45 மணிக்கு திருச்சி சென்று சேருகிறது. மேலும் திருச்சியில் இருந்து ஈரோட்டுக்கு காலை 6.50 மணிக்கு புறப்படும் ரெயில் பகல் 11.10-க்கு வந்து சேருகிறது. மாலை 4.35 மணிக்கு புறப்படும் ரெயில் இரவு 8.25 மணிக்கு ஈரோடு வருகிறது. இதற்கான அட்டவணையை ரெயில்வே நிர்வாகம் அறிவித்து உள்ளது. ரெயில்வே நிர்வாகத்துக்கு ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறோம்.

### இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட்:

# ரோகித் விலகல் எதிரொலி; கேப்டனாக பும்ரா நியமனம்

**பர்மிங்காம், ஜூன் 30-**

இங்கிலாந்திற்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய அணி கேப்டன் ரோகித் சர்மா விலகியதை அடுத்து அணியின் கேப்டனாக ஜஸ்ப்ரிட் பும்ரா நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



**கொரோனா காரணமாக...**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஆண்டு தள்ளி வைக்கப்பட்ட இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பர்மிங்காமில் ஜூலை 1-ந் தேதி தொடங்குகிறது. டெஸ்ட் தொடருக்கு முன்னதாக இந்தியா- லீசெஸ்டர்ஷைர் அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டம் நடந்தது. இந்த பயிற்சி ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. போட்டியின் போது இந்திய கேப்டன் ரோகித் சர்மா கொரோனாவால் பாதிக்கப்பட்டார். அதனால் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

**புதிய கேப்டனாக...**

இந்த நிலையில் கேப்டன் ரோகித் சர்மா இன்னும் முழுமையாக குணமடையாததால், இங்கிலாந்து அணிக்கு எதிரான5-வது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் எனவும், அவர் இந்த போட்டியிலிருந்து விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் இந்த டெஸ்ட் போட்டிக்கு பும்ரா கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

### மகாராஷ்டிராவில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த தடை இல்லை

### சுப்ரீம் கோர்ட் உத்தரவு



**புதுடெல்லி, ஜூன் 30-**

மகாராஷ்டிராவில் உத்தவ் தாக்கரே அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்புக்கு தடை இல்லை என சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு கூறியுள்ளது.

மகாராஷ்டிர சட்டசபையில் இன்று சிறப்பு கூட்டத்தை கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று முதல்-மந்திரி உத்தவ் தாக்கரேவுக்கு கவர்னர் பகத்சிங் கோஷியாரி உத்தரவிட்டு கடிதம் அனுப்பி உள்ளார். கவர்னரின் இந்த உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் சிவசேனா மனு தாக்கல் செய்துள்ளது.

சிவசேனா கொறடா சுனில் பிரபு சார்பில் வக்கீல் ஏ.எம்.சிங்வி இந்த மனுவை தாக்கல் செய்தார். அதில், 16 எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்க நோட்டீஸ் தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் இருக்கும்போது நம்பிக்கை வாக்கெடுப்புக்கு மகாராஷ்டிரா கவர்னர் உத்தரவிட்டது சட்ட விரோதமானது என்றும், இந்த உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இந்த மனு, சுப்ரீம் கோர்ட்டின் விடுமுறை கால அமர்வான நீதிபதிகள் சூரியகாந்த், பர்திவாலா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அதிருப்தி குழுவின் தலைவர் ஏக்நாத் ஷிண்டே சார்பில் மூத்த வழக்கறிஞர் என்.கே.கவுல் ஆஜராகி வாதாடினார். அப்போது, உத்தவ் தாக்கரே தலைமையிலான குழு நம்பிக்கையற்ற சிறுபான்மையாக கட்சிக்குள் இருப்பதாகவும், குதிரை பேரத்தை தடுத்து நிறுத்த வேண்டுமானால், சட்டசபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்துவதே சிறந்த வழி என்றும் கூறினார்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தாமதம் ஏற்பட்டால் அது ஜனநாயக அரசியலுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தும். தகுதிநீக்க நடைமுறையானது சபாநாயகர் முன் நிலுவையில் இருப்பதை வைத்து, நம்பிக்கை வாக்கெடுப்பை தாமதப்படுத்துவதற்கு எந்த காரணமும் இல்லை என்றும் ஷிண்டேவின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

இந்தநிலையில், மகாராஷ்டிராவில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த கவர்னர் பிறப்பித்த உத்தரவு செல்லும். கவர்னரின் உத்தரவுப்படி மகாராஷ்டிரா சட்டப்பேரவையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த தடையில்லை. உத்தவ் தாக்கரே அரசு இன்று சட்டப்பேரவையில் பெரும்பான்மை நிரூபிக்க உத்தரவிட்டது சுப்ரீம் கோர்ட். நம்பிக்கை வாக்கெடுப்பின் முடிவு வழக்கின் இறுதி உத்தரவுக்கு உட்பட்டது. சிவசேனா கொறடா சுனில் பிரபுவின் வழக்கை வரும் 11-ம் தேதி ஒத்தி வைத்தது சுப்ரீம் கோர்ட்.

# தமிழகத்தின் அனைத்து உரிமைகளுக்காக போராடக்கூடிய அரசு தான் தி.மு.க. அரசு

### வேலூரில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேச்சு

**வேலூர், ஜூன் 30-**

தமிழகத்தின் அனைத்து உரிமைகளுக்காகவும் போராட கூடிய அரசுதான் தி.மு.க. அரசு என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது,

அனைத்துத் துறைகளும் வளர வேண்டும். அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும். அனைத்துத் தரப்பு மக்களும் வளம் பெற்று பல்வேறு வாய்ப்புகள் பெருக வேண்டும் என்கிற உணர்வோடு பாடுபட்டு கொண்டிருக்கக்கூடிய அரசு தான் இந்த திராவிட மாடல் அரசு. அதுதான் இன்றைக்கு ஆட்சிப்பீடத்தில் இருக்கிறது. கடந்த பத்தாண்டு காலத்தில் செய்யத் தவறிய அனைத்துப் பணிகளையும், கடந்த ஓராண்டு காலத்தில் செய்து முடித்திருக்கிறோம்.

இப்படி, அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு பணிகளைச் செய்வதன் மூலமாகத்தான், தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக நாம் வளர்த்தெடுக்க முடியும். தமிழகத்தை இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், அண்ணாந்து பார்க்கும் நிலையில் வைத்திருக்கிறோம். தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்கள், நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் அளிக்கக்கூடிய பங்கிற்கு ஏற்ப, ஒன்றிய அரசும், திட்டங்களிலும் நிதியிலும், தனது பங்களிப்பை உயர்த்த வேண்டும் என்று பிரதமரிடம் ஒரே மேடையில் கோரிக்கை வைத்தேன். உரிமையோடு கேட்டேன். நிதி உரிமைகளைக் கேட்பது என்பது, ஏராளமான மக்கள் நலத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு வருவதற்காகத் தான். இந்த மாநிலத்தின் உரிமைகளைப் பெறுவதற்காக தான், எந்த சமரசத்துக்கும் இடமில்லாமல் போராடும் அரசாக தி.மு.க. அரசு இருக்கிறது.

காவிரியின் குறுக்கே கர்நாடக அரசு - மேகதாது என்ற புதிய அணையைக் கட்டத் திட்டமிட்டிருக்கிறது. அதைத் தொடக்கத்தில் இருந்தே நாம் எதிர்த்து, தடுத்து வருகிறோம். ஆனாலும் அவ்வப்போது நேரம் கிடைக்கிறபொழுது எல்லாம், பொழுது போகவில்லை என்றால், உடனே அதைப் பற்றி தொடங்கி விடுகிறார்கள். அணை கட்ட நிதி ஒதுக்குவது, சட்டம் போடுவது, ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது, டெல்லிக்குப் படையெடுப்பது என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யும்போதெல்லாம், நாமும் அவற்றுக்குத் தடுப்பணை போடும் காரியங்களைச் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறோம்.எனவே, கர்நாடக அரசுக்கு எந்தவிதமான தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் அனுமதியையும், ஒன்றிய அரசு தரக்கூடாது என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாகவும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படி தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளுக்காகவும், எந்த சமரசங்களுக்கும் இடமில்லாமல் போராடக்கூடிய, வாதாடக்கூடிய அரசு தான் தி.மு.க. அரசு.

ஆளும் கட்சியாக இருக்கும்போதும், தீட்டக்கூடிய திட்டமாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருக்கும் போது வைக்கும் கோரிக்கையாக இருந்தாலும் சரி, அவை அனைத்தும் தமிழ்நாட்டின் அனைத்து மக்களுடைய நலனுக்காக மட்டுமே. அப்படித் தான் தி.மு.க. எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

### விம்பிள்டனில் இருந்து வெளியேறினார்:

# 24-வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்துக்கான செரீனாவின் காத்திருப்பு தொடர்கிறது

**லண்டன், ஜூன் 30-**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் முதல் சுற்றிலேயே பிரபல வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார். இதன் மூலம் அவரின் 24-வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்துக்கான காத்திருப்பு மீண்டும் தொடர்கிறது.

**ஒரு வருடத்துக்கு...**

பிரபல டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஒரு வருடத்துக்குப் பிறகு மீண்டும் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளார். 2021 பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ், 4-வது சுற்றில் தோல்வியடைந்தார். பிறகு முதல் சுற்று ஆட்டத்தின் போது காயம் ஏற்பட்டதால் விம்பிள்டன் போட்டியிலிருந்து விலகினார்.

**பங்கேற்கவில்லை...**

கடந்த வருட விம்பிள்டன் போட்டியில் கலந்து கொண்ட பிறகு வேறு எந்த டென்னிஸ் போட்டியிலும் 40 வயது செரீனா பங்கேற்கவில்லை. சமீபத்தில் இங்கிலாந்தின் ஈஸ்ட்போர்ன் நகரில் நடைபெற்ற ராத்ஸே சர்வதேச டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் விளையாடினார். குழந்தை பிறந்த பிறகு வழக்கம் போல விளையாட ஆரம்பித்த செரீனா, தற்போது ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் விளையாட வந்துள்ளார்.



**1204 இடத்துக்கு...**

ஒரு வருடமாக விளையாடாமல் போனதால் தரவரிசையில் 1204 இடத்துக்கு இறங்கியுள்ளார் செரீனா. விம்பிள்டன் 2022 போட்டியில் முதல் சுற்றில் தரவரிசையில் 113-வது இடத்தில் உள்ள பிரான்ஸின் ஹார்மனி டேன்-ஐ எதிர்கொண்டார். 24 வயது ஹார்மனி டேன், மூன்று மணி நேரம் போராடி 7-5, 1-6, 7-6 (10-7) என்ற செட் கணக்கில் செரீனாவைத் தோற்கடித்தார்.

**தொடரும் காத்திருப்பு...**

ஏழு முறை விம்பிள்டன் பட்டங்களை வென்றுள்ள செரீனா, கடைசியாக 2016-ல் விம்பிள்டனில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார். குழந்தை பிறந்த பிறகு 2018, 2019 விம்பிள்டன் போட்டிகளின் இறுதிச்சுற்று ஆட்டங்களுக்குத் தகுதியடைந்தார். சமீபத்திய தோல்விகளால் செரீனாவின் 24-வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்துக்கான காத்திருப்பு மீண்டும் தொடர்கிறது.

**சாதனையை சமன்...**

இதுவரை 23 பட்டங்களை வென்றுள்ள செரீனா, இன்னும் ஒரு கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வெல்லும் பட்சத்தில் மகளிர் டென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவரான மார்க்ரெட் கோர்ட்டின் சாதனையை சமன் செய்வார். ஆனால் அந்த ஒரு பட்டத்துக்காக மிகவும் போராடிக் கொண்டிருக்கிறார். கடைசியாக, 2017-ல் ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார். அதன்பிறகு விளையாடிய நான்கு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளின் இறுதிச்சுற்றுகளிலும் தோல்வியடைந்தார்.

# வேலூரில் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட ரூ. 62.10 கோடியில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

**வேலூர், ஜூன் 30-**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வேலூர் மாவட்டம், கோட்டை மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், வேலூர் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட ரூ. 62.10 கோடி செலவிலான முடிவுற்ற 17 பணிகளை திறந்து வைத்து, ரூ. 32.89 கோடி மதிப்பீட்டிலான 50 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 30,423 பயனாளிகளுக்கு ரூ.360.53 கோடி மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

வேலூரில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 9.25 ஏக்கர் பரப்பளவில், ரூ.53.13 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் புதிய பேருந்து நிலையத்தை முதல்வர் திறந்து வைத்தார். இப்புதிய பேருந்து நிலையம், 54 பேருந்து நிறுத்த தடங்களும், 41 நிலை நிறுத்த தடங்கள், 8 நகர பேருந்து தடங்கள், 82 கடைகள், 2 உணவகங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், ஒரு வாகன நுழைவு வாயில் மற்றும் 2 வாகன வெளியேரும் வழிகளுடன், வெளியூர் பேருந்துகள், மாநகர பேருந்துகள் மற்றும் இதர வாகனங்களுக்கு தனியே வழிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் பயணிகள் காத்திருப்பு அறைகள், மின் தூக்கிகள், ஊனமுற்றோருக்கான கழிவறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தீ அணைப்பு வசதிகள், சிசிடிவி கேமராக்கள், சோலார் மின்வசதி, உயர்மின் கோபுர விளக்குகள், மின் வாகனங்களுக்கான சார்ஜிங் அலகுகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

அதை தொடர்ந்து 62 கோடியே 10 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் 17 முடிவுற்ற பணிகளை முதல்வர் திறந்து வைத்தார். மேலும் 32 கோடியே 89 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 50 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார். அதை தொடர்ந்து பல்வேறு துறைகளின் சார்பில் 30,423 பயனாளிகளுக்கு 360 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை முதல்வர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ. வேலு, ஆர். காந்தி, வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், நந்தகுமார், வில்வநாதன், ஜே.எல். ஈஸ்வரப்பன், அமுலு விஜயன், துணை மேயர் சுனில் குமார், வேலூர் மாவட்ட கலெக்டர் குமாரவேல் பாண்டியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உம்ரைன் மாலிக்கை பயன்படுத்தியது ஏன்? ஹர்திக் விளக்கம்

**டப்லின், ஜூன் 30-**

அயர்லாந்து அணிக்கு எதிரான டி20 போட்டியின் கடைசி ஓவரில் த்ரில் வெற்றி பெற்றது இந்திய கிரிக்கெட் அணி. அழுத்தம் நிறைந்த அந்த ஓவரை இந்திய அணிக்காக வீசி இருந்தார் இளம் வீரர் உம்ரான் மாலிக். அதற்கான காரணம் என்ன என்பது குறித்த விளக்கம் அளித்துள்ளார் ஹர்திக் பாண்டியா.

**சுற்றுப்பயணம்...**

இந்திய கிரிக்கெட் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடும் வகையில் அயர்லாந்து நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இந்த தொடரில் இந்திய அணியை ஹர்திக் பாண்டியா கேப்டனாக வழிநடத்தினார். தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா வென்றுள்ளது. இதில் கடைசி போட்டியில் ஆட்டம் இறுதி ஓவர் வரை சென்றிருந்தது. இரு அணிகளும் வெற்றிக்காக போராடி கொண்டிருந்த சமயம். அந்த ஓவரை இந்திய அணி சார்பில் உம்ரான் மாலிக் வீசி வெற்றி பெற செய்தார்.

**நம்பிக்கை இருந்தது...**

வெற்றி குறித்து இந்திய அணி கேப்டன் ஹர்திக் பாண்ட்யா தெரிவிக்கையில்., ஆட்டத்தில் இருந்த அழுத்தத்தை புறந்தள்ளிவிட்டு உம்ரான் பந்து வீச நான் அனுமதித்தேன். அவர் மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. அவரது பந்துவீச்சில் வேகம் உள்ளது. அப்படியொரு வேகத்தை எதிர்கொண்டு கடைசி ஓவரில் 17 ரன்கள் எடுப்பது கடினம். எதிரணியினர் சிறப்பாக பேட் செய்திருந்தனர். அதே நேரத்தில் அவர்களை எங்கள் பந்து வீச்சாளர்கள் கட்டுப்படுத்தியும் இருந்தனர். முதல் முறை கேப்டனாக தொடரை வென்றதில் மகிழ்ச்சி” என ஹர்திக் தெரிவித்தார்.

### இரண்டு போட்டிகள் கொண்ட டி-20 தொடர்:

# அயர்லாந்தை ஒயிட்வாஷ் செய்தது இந்திய அணி..!

**டப்லின், ஜூன் 30-**

அயர்லாந்து அணிக்கு எதிரான டி20 கிரிக்கெட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது இந்தியா.

**228 ரன்கள் இலக்கு...**

228 ரன்கள் டார்கெட்டை துரத்திய அயர்லாந்து அணிக்கு ஓப்பனிங் பார்ட்னர்ஷிப் சிறப்பாக அமைந்தது. பவுல் ஸ்டிர்லிங் - ஆண்ட்ரூ பால்பிர்ன் இருவரும் ஓப்பனிங் இறங்கினர். இந்திய அணி சார்பில் முதல் ஓவரை வழக்கம் போல் புவனேஷ்வர் குமார் தொடங்கினார். அயர்லாந்து அணியில் அதிரடிக்கு பெயர்பெற்ற ஸ்டிர்லிங் அந்த ஓவரை எதிர்கொண்டார். சந்தித்த முதல் ஆறு பந்துகளில் ஒரு சிக்ஸர் மூன்று பவுண்டரியுடன் 18 ரன்கள் எடுத்து அதிரடியாக ரன்கள் வேட்டையை தொடங்கி வைத்தார்.



**ரவி பிஷ்னோய்...**

தொடர்ந்து இரண்டாவது ஓவரிலும் ஒரு சிக்ஸர், மூன்றாவது மற்றும் நான்காவது ஓவரிலும் தலா ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி என அதிரடி காட்டினார் ஒப்பனர்கள் இருவரும். இவர்களால் முதல் 5 ஓவர்கள் முடிவில் 65 ரன்கள் என்ற நிலையை எட்டியது. ரவி பிஷ்னோய் வந்து இந்தக் கூட்டணியை பிரித்தார். ஸ்டிர்லிங் 17 பந்துகள் சந்தித்து 40 ரன்கள் சேர்த்திருந்தபோது முதல் விக்கெட்டாக நடையைக் கட்டினார்.

**பால்பிர்ன் அரைசதம்...**

ஸ்டிர்லிங் சென்றாலும், கடந்த போட்டியில் தனி வீரராக போராடிய ஹேரி டெக்டருடன் இணைந்து ஆண்ட்ரூ பால்பிர்ன் தனது ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் சேர்ந்து சில ஓவர்கள் அதிரடி காட்டி ரன் ரேட்டை குறையவிடாமல் பார்த்துக்கொண்டனர். பால்பிர்ன் அரைசதம் கடந்து 60 ரன்கள் எடுத்த போது அவரை அவுட் ஆக்கினார் ஹர்ஷல் படேல். அதேநேரம், இந்தப் போட்டியிலும் அடுத்தடுத்து பவுண்டரிகள் விளாசி பயம் காட்டினார் ஹேரி டெக்டர்.

**புவனேஷ்வர் குமார்...**

28 பந்துகளில் 39 ரன்கள் எடுத்திருந்த அவரை, புவனேஷ்வர் குமார் வெளியேற்ற நிம்மதி ஏற்பட்டது. அந்த நிம்மதியை சிறிதுநேரம்கூட நிலைக்கவிடவில்லை அயர்லாந்தின் மற்றொரு பேட்ஸ்மேன் ஜார்ஜ் டோக்ரெல். கடைசி ஓவர்களில் இவர் இந்திய பவுலர்களை பயம்காட்டினார். இறுதி ஓவரில் வெற்றிக்கு 17 ரன்கள் தேவைப்பட்டது. இதில் முதல் ஐந்து பந்துகளில் ஜார்ஜ் டோக்ரெல் மற்றும் மார்க் அடைர் இருவரும் இணைந்து 11 ரன்கள் எடுத்தனர். கடைசி பந்தில் ஆறு ரன்கள் தேவைப்பட்டது. எனினும் உம்ரான் மாலிக் திறம்பட பந்துவீசி இந்திய அணியை வெற்றி பெற வைத்தார்.20 ஓவர்களில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 221 ரன்கள் எடுத்த அயர்லாந்து 4 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இந்த வெற்றியின் மூலம் தொடரை 2 - 0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது இந்தியா.

**இந்தியா இன்னிங்ஸ்...**

டாஸ் வென்ற இந்தியா பேட்டிங் தேர்வு செய்தது. ஓப்பனிங் இணையாக இம்முறையும் இஷான் கிஷனுடன், தீபக் ஹூடா களம் கண்டார். இப்போட்டியில் 3வது ஓவரின் முதல் பந்திலேயே இந்திய அணி முதல் விக்கெட்டை பறிகொடுத்தது. மார்க் அடைர் பந்தில் 3 ரன்களே எடுத்திருந்த இஷான் கிஷன் கேட்ச் கொடுத்து வெளியேறினார். ஆடும் லெவனில் இடம் பெற்ற சஞ்சு சாம்சன் ஒன்டவுனாக இறங்கினார். இவரும் தீபக் ஹூடாவும் இணைந்து அயர்லாந்து பந்து வீச்சை சிதறடித்தனர்.

**தீபக் ஹூடா...**

அயர்லாந்து பவுலர்கள் எவ்வளவு முயன்றும், இவர்களை பிரிக்க முடியவில்லை. சஞ்சு சாம்சன், 31 பந்துகளில் தனது அரை சதத்தை பூர்த்தி செய்ய, மறுபுறம் அவருக்கு முன்னதாக தீபக் ஹூடா அரைசதம் கடந்தார். 3வது ஓவரில் இணைந்த இவர்கள் கூட்டணியை மார்க் அடைர் வந்தே பிரித்தார். அதுவும் 16.2 ஓவரில். அரைசதம் கடந்து 77 ரன்களை எடுத்திருந்த சஞ்சு சாம்சன் அடைரின் ஸ்லோ யார்க்கரில் போல்டாகினார்.

**முதல் சதத்தை பதிவு...**

அதேநேரம் நிலைத்து ஆடிய தீபக் ஹூடா சர்வதேச டி20 போட்டியில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். 55 டெலிவரிகளில் 9 பவுண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்களுடன் விளாசி தனது முதல் சதத்தை எடுத்திருந்தார். இறுதி ஓவர் வரை நிலைத்து ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 18 ஓவரின் இறுதி பந்தில் 104 ரன்களுக்கு அவுட் ஆகினார். இதன்பின் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 227 ரன்கள் எடுத்தது. அயர்லாந்து தரப்பில் மார்க் அடைர் அதிகபட்சமாக 3 விக்கெட்டும், லிட்டில் மற்றும் யங் தலா இரண்டு விக்கெட்டும் எடுத்தனர்.

# நான்கு வார காலத்தில் வரி, தண்ட தொகையாக ரூ.12 .19 கோடி வசூல்

### வணிகவரித்துறை தகவல்

**சென்னை, ஜூன் 30-**

09.05.2022 முதல் 05.06.2022 வரையிலான 4 வார காலத்தில் 1273 இனங்களில் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு வரி / தண்டத்தொகையாக ரூ. 12 .19 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளதாக வணிகவரித்துறை தெரிவித்துள்ளது.

பொது மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்திடுவதில் வணிகவரித் துறை மூலம் பெறப்படும் வரி வருவாயானது பெரும் பங்கு வகிக்கிறது. இவ்வாறு அரசுக்கு சேர வேண்டிய வரி வருவாய் உரிய காலத்தில் பெறப்படுவதை உறுதி செய்யும் விதத்தில் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தியின் உத்திரவிற்கிணங்க, வணிகவரித் துறையின் புலனாய்வு சார்ந்த நடவடிக்கைகளை மேலும் வலுவாக்குவது, ரோந்துப் பணிக் குழுக்களைக் கொண்டு பட்டியல் இல்லாமல் செல்லும் வாகனங்களை தணிக்கை செய்யும் பணியினை திறம்பட செய்வது போன்ற பல புதிய முயற்சிகள் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி 09.05.2022 முதல் 05.06.2022 வரை முடிவடைந்த நான்கு வார காலகட்டத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து வணிகவரி நுண்ணறிவு பிரிவு அலுவலகங்கள் மூலமாக 46247 வாகனத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 55982 மின்னணு வழிப்பட்டியல்கள் சரி பார்க்கப்பட்டு 1273 இனங்களில் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு வரி / தண்டத்தொகையாக ரூ. 12 .19 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. அரசுக்கு வர வேண்டிய வரி வருவாய் எவ்வித ஏய்ப்புகளும் இன்றி வசூல் செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் இத்தகைய தணிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இவ்வாறு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### மீண்டும் அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு:

# இந்தியாவில் 14,506 பேருக்கு புதிதாக தொற்று

**புதுடெல்லி, ஜூன் 30-**

நாடு முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 14,506-க்கும் அதிகமானோருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் மீண்டும் தினசரி பாதிப்பு உயர்ந்து வருகிறது.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது., நாடு முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 14,506 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4,34,33,345-ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் 99,602 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சிகிச்சை பெறுவோரின் விகிதம் 0.23 சதவீதமாக உள்ளது. தொற்று பாதித்தவர்களில் புதிதாக 30 பேர் இறந்துள்ளனர். இதனால் தொற்றுக்கு இறந்தோரின் எண்ணிக்கை 5,25,077 ஆக அதிகரித்துள்ளது. இறந்தோரின் விகிதம் 1.21 சதவீதமாக உள்ளது. கொரோனாவில் இருந்து 11,574 பேர் குணமடைந்துள்ளனர். இதனால் இதுவரை குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 4,28,08,066-ஆக அதிகரித்துள்ளது என்று குணமடைந்தோர் விகிதம் 98.59 சதவீதமாக உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இதுவரை 1,97,46,57,138 கோடி டோஸ் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. கொரோனா தொற்று பரவல் படிப்படியாகக் குறைந்து வந்த நிலையில், கொரோனா தொற்று பரவல் தற்போது மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.



திருப்பத்தூரில் நேற்று, ரூ.109.71 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள, திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர்ஆனந்த், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கலெக்டர் அமர்குஷ்வாஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.



வேலூரில் நேற்று, ரூ.53.13 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் புதிய பேருந்து நிலையத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர்.காந்தி, மாநகராட்சி மேயர் சுஜாதா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் பி.கார்த்திகேயன், ஏ.பி.நந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாவட்ட கலெக்டர் பெ.குமாரவேல் பாண்டியன் உடனிருந்தனர்.

# கொரோனா தொற்று அதிகரித்தாலும் தீவிர கட்டுப்பாடுகள் தேவையில்லை

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை,ஜூன் 30- தமிழகத்தில் கொரோனா தொற்று அதிகரித்தாலும் 5 சதவீதம் பேர் மட்டுமே மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளதால், தீவிர கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவையில்லை என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை மயிலாப்பூர் லஸ் கார்னரில், முகக்கவசம் அணிய வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 50 ஆயிரம் பேருக்கு முகக்கவசம் வழங்கும் நிகழ்ச்சி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று நடைப்பெற்றது. சுமார் 100 செவிலியர் மாணவிகள் லஸ் கார்னர் மற்றும் அதைச் சுற்றியுள்ள முக்கிய சாலைகளில் முகக்கவசம் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சுப்பிரமணியன், "தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் இதுவரை 8,970 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொற்று பரவலை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு தரப்படும் சிகிச்சைகளை ஆய்வு செய்து வருகிறோம்.

31-வது தடுப்பூசி முகாம் வரும் ஜூலை 10ம் தேதி நடைபெறவுள்ளது. தடுப்பூசி செலுத்துவது, முகக்கவசம் அணிவது மட்டுமே நோய் தடுப்பு முறை. மக்கள் தடுப்பூசி முகாமை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வி நிலையங்களில் தொற்று அதிகரித்து வரும் நிலையில், வகுப்பறைகளில் முகக்கவசம் அணிந்து தனி மனித இடைவெளி விட்டு மாணவர்கள் அமர வைக்க வேண்டும் என சுகாதாரத் துறை சார்பில் கல்வித் துறைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று அதிகரித்தாலும் 5 சதவீதம் பேர் மட்டுமே மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளதால், தீவிர கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே தமிழகத்தில் மீண்டும் கொரோனோ பரவல் அதிகரித்து வரும் நிலையில் சுகாதாரத்துறை செயலாளர் செந்தில்குமார் மாவட்ட நிர்வாகங்களுக்கு கொரோனோ வழிகாட்டு நெறிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிக்க உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், " உருமாறிய BA.5 மற்றும் BA2.38 என்ற ஓமிக்ரான் வகை பாதிப்புகள் பெருமளவில் பரவி வருகிறது. இதன் காரணமாக நோய் பாதிப்புகள் அதிகரிக்கும் என வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் பொதுமக்கள் தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிதல், தடுப்பூசி செலுத்துதல் ஆகியவற்றை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். சமீபத்திய ஆய்வில் 26 சதவீதம் சந்தை , பொழுதுபோக்கு இடங்கள் மற்றும் பொது இடங்களில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றாததால் நோய் பாதிப்பு கண்டறியப்பட்டு உள்ளது தெரியவந்துள்ளது. 18 சதவீதம் பணிபுரியும் இடங்களிலும் , 16 சதவீதம் பயணத்திலும், 12 சதவீதம் கல்வி நிலையங்கள் வாயிலாகவும் கொரோனோ தொற்றுக்கு ஆளாகி இருப்பது தெரியவந்துள்ளது.

எனவே அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றுகிறார்களா என்பது தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு செய்ய வேண்டும். அலுவலகத்திற்கு வரக்கூடிய அனைவருக்கும் தெர்மல் பரிசோதனை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுளளது.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி முன்னிலையில், தொழில்நுட்ப கல்வி இயக்ககம் மற்றும் மேண்டோ ஆட்டோமோட்டிவ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கிடையே மாணவர்களின் திறன் மற்றும் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அருகில் உயர்கல்வித்துறை முதன்மைச்செயலாளர் தா.கார்த்திகேயன், வழிகாட்டி நிறுவன நிர்வாக இயக்குநர் பூஜா குல்கர்னி, தொழில்நுட்பக்கல்வி ஆணையர் க.லட்சுமிபிரியா, இணை நிர்வாக இயக்குநர் எஸ்.சாரதி ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட துறை சார்ந்த அறிவிப்புகளின் செயலாக்கம் மற்றும் தற்போதைய நிலை குறித்து நேற்று ஆய்வு மேற்கொண்டார். உடன் முதன்மைச்செயலாளர் டாக்டர் க.மணிவாசன், ஆணையர் சோ.மதுமதி, மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, கூடுதல் செயலாளர் சு.பழனிசாமி, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் எஸ்.அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.

# சமூக நலத்துறைக்கு ரூ.7.34 கோடி நிதி: தமிழக அரசு அரசாணை வெளியீடு

சென்னை,ஜூன் 30- சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மானியக் கோரிக்கையின் போது 21.04.2022 அன்று தமிழக சட்டப் பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் வெளியிட்ட அறிவிப்புகளை செயல்படுத்தும் பொருட்டு மொத்தம் ரூ.7.34 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவையில் 21.04.2022 அன்று மானியக் கோரிக்கையின் போது, எடை குறைவுடன் பிறக்கும் குழந்தைகளை கண்காணித்திட 85.00 லட்சம் ரூபாய் செலவினத்தில் 1,000 எண்ணிக்கையிலான மின்னணு தொழில்நுட்ப வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் வழங்கப்படும். இரத்த சோகையைத் தடுக்க 19 மாவட்டங்களில் தன் சுத்தம், குடற்புழு நீக்கம், கை கழுவுதல் உள்ளிட்ட விரிவான தீவிர விழிப்புணர்வு இயக்கத்தை 4.75 கோடி ரூபாய் செலவினத்தில் நடத்தப்படும். மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களில், குழந்தைகளின் முதல் 1000 நாட்கள் குறித்த விழிப்புணர்வை 1.74 கோடி ரூபாய் செலவினத்தில் ஏற்படுத்தப்படும் போன்ற அறிவிப்புகள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் வெளியிடப்பட்டன.

இந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் பொருட்டு, எடை குறைவுடன் பிறக்கும் குழந்தைகளை கண்காணித்திட 85.00 லட்சம் ரூபாய் செலவினத்தில் 1,000 எண்ணிக்கையிலான மின்னணு தொழில்நுட்ப வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் வழங்கவும், இரத்த சோகையைத் தடுக்க 19 மாவட்டங்களில் தன் சுத்தம், குடற்புழு நீக்கம், கை கழுவுதல் உள்ளிட்ட விரிவான தீவிர விழிப்புணர்வு இயக்கத்தை 4.75 கோடி ரூபாய் செலவினத்தில் நடத்தவும் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களில், குழந்தைகளின் முதல் 1000 நாட்கள் குறித்த விழிப்புணர்வை 1.74 கோடி ரூபாய் செலவினத்தில் ஏற்படுத்தவும் ஆக மொத்தம் ரூ.7.34 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## நளினி விடுதலை கோரிய வழக்கு:

# தமிழக அரசு தரப்பில் தெரிவிக்காத கருத்துக்களை நீக்கியது ஐகோர்ட்

சென்னை,ஜூன் 30- ராஜிவ் காந்தி கொலை வழக்கின் ஆயுள் தண்டனை கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான தீர்மானத்தை கவர்னர் குடியரசு தலைவருக்கு அனுப்பியது சரி என அரசு வாதிட்டதாக பதிவு செய்யப்பட்ட கருத்துக்களை நீக்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரையும் விடுதலை செய்ய அதிமுக, ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையில் தீர்மானம் இயற்றி அதை கவர்னரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், கவர்னர் ஒப்புதல் அளிக்க கால தாமதம் செய்தார்.

இதையடுத்து, கவர்னர் ஒப்புதல் இல்லாமல் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை தள்ளுபடி செய்து கடந்த 17ம் தேதி தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி, நீதிபதி என்.மாலா அமர்வு தீர்ப்பளித்தது.

அந்த தீர்ப்பில், தமிழ்நாடு அரசு தரப்பில் தெரிவிக்காத கருத்துக்கள் மற்றும் வாதங்கள் இடம் பெற்றுள்ளதாகவும், அந்த பகுதியை நீக்க வேண்டும் என்று உள்துறை இணை செயலாளர் மனு தாக்கல் செய்துள்ளார். அதில், நளினியை விடுதலை செய்ய வேண்டும் என்ற அமைச்சரவை தீர்மானத்தை குடியரசு தலைவருக்கு கவர்னர் அனுப்பி வைத்தது சரி என்று தலைமை வழக்கறிஞர் தன் வாதத்தில் கூறியதாக தீர்ப்பில் உள்ளது.

ஆனால், அவர் அப்படி எதுவும் கூறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அமைச்சரவை தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்து, கவர்னரோ அல்லது ஜனாதிபதியோ கையெழுத்திட வில்லை என்றால், நளினியை முன்கூட்டியே விடுதலை செய்ய முடியாது என்று தலைமை வழக்கறிஞர் கூறியதாக தீர்ப்பில் உள்ளது.இந்த கருத்தையும் அவர் தெரிவிக்க வில்லை.

அதனால் நளினி மனு மீதான தீர்ப்பை திருத்த வேண்டும் எனவும், தலைமை வழக்கறிஞர் கூறாத வாதங்களை தீர்ப்பில் இருந்து நீக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி மாலா அமர்வு, அரசு தலைமை வழக்கறிஞர் தெரிவித்ததாக பதிவு செய்யப்பட்ட கருத்துக்களை நீக்கி உத்தரவிட்டது.

## முதல்வர் பதவியை...(1-ம் பக்க தொடர்ச்சி)

இதற்கிடையே மகாராஷ்டிராவில் சிவசேனா தலைமையிலான கூட்டணி அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ள நிலையில் மகாராஷ்டிர மாநில முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாக உத்தவ் தாக்கரே அறிவித்துள்ளார். நேற்று மாலை நடந்த அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு உத்தவ் தாக்கரே தெரிவிக்கையில்., முதல்வர் பதவியை தான் ராஜினாமா செய்வதாக தெரிவித்தார். அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் விரும்பியதை தான் கொடுத்துள்ளதாக விளக்கமளித்தார். இவ்வளவு காலம் கூட்டணி அரசுக்கு வழங்கி ஆதரவுக்கு தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்திக்கு நன்றி தெரிவிப்பதாகவும், அடுத்து அமையவுள்ள அரசுக்கு தேவையான ஆதரவை சிவசேனா வழங்கும் என்றார்.

## துணை ஜனாதிபதி தேர்தல்...(1-ம் பக்க தொடர்ச்சி)

தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் 6-ம் தேதி வாக்குப்பதிவு முடிந்த உடன் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 543 மக்களவை உறுப்பினர்கள், 233 மாநிலங்களவை உறுப்பினர்கள், 12 நியமன உறுப்பினர்கள் வாக்களிக்க உள்ளனர். இதற்கிடையே இந்திய ஜனாதிபதி தேர்தல் ஜூலை 18-ம் தேதி நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பாக திரௌபதிமுர்முவும், எதிர்க்கட்சிகளின் சார்பாக யஷ்வந்த் சின்ஹாவும் போட்டியிடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புடன் தொடர்பு:

# உதய்பூர் கொலை தொடர்பாக என்.ஐ.ஏ. விசாரணைக்கு உத்தரவு

புதுடெல்லி,ஜூன் 30- ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் தையல்காரர் ஒருவரை கொடூரமான முறையில் கழுத்தறுத்து கொலை செய்த சம்பவத்தில் தொடர்புடைய இருவருக்கும் பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இருப்பது உறுதியாகியுள்ளது. இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) விசாரணை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக என்ஐஏ குழு ஒன்று உதய்பூர் சென்றுள்ளது.

உதய்பூரில் நேற்று முன்தினம் முதல் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக போலீஸ் படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் கராச்சி நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சன்னி முஸ்லிம்களின் அடிப்படைவாத அமைப்பான தாவத் இ இஸ்லாமி குழுவுடனும், தெஹ்ரிக் இ லப்பைக் என்ற பயங்கரவாத அமைப்புடனும் கொலையாளிகளுக்கு தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனை நோக்கி விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

முன்னதாக ராஜஸ்தான் மாநிலம் உதய்பூர் நகரிலுள்ள மால்தாஸ் பகுதியில் கன்னையா லால் என்பவர் தையல் கடை நடத்தி வந்தார். அவரது கடையில் அத்துமீறி புகுந்த 2 பேர் அங்கு வேலை செய்து கொண்டிருந்த கன்னையாலாலை வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்று பொது இடத்தில் வைத்து அவரது கழுத்தை அறுத்து கொன்றனர்.

இந்த சம்பவத்தை வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் அவர்கள் வெளியிட்டனர். மேலும் பிரதமர் மோடிக்கும் கொலை மிரட்டல் விடுத்தனர்.

# அசாமில் கனமழை, வெள்ளத்திற்கு பலி எண்ணிக்கை 139 ஆக உயர்வு

கவுகாத்தி,ஜூன் 30- அசாம் மாநிலத்தில் கனமழை மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 139 ஆக அதிகரித்துள்ளது. முகாமில் 1.76 லட்சம் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

அசாம் மாநிலத்தில் தீவிர மழைப்பொழின் காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அங்கு ஆயிரக்கணக்கான கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. மேலும், லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்த நிலையில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அங்கு கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 5 பேர் உயிரிழந்ததை அடுத்து, பலி எண்ணிக்கை 139 ஆக உயர்ந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, பாதிக்கப்பட்ட 19 மாவட்டங்களில் உள்ள வெள்ள முகாம்களில் 1.76 லட்சம் மக்கள் இருப்பதாக மாநில பேரிடர் மேலாண்மைத் துறை தகவல் தெரிவித்துள்ளது. பாக்ஸா, பிஸ்வநாத், சிரங், பான்கைகான், திப்ருகர், டாராங், கோலாகாட், ஹிலகண்டி மற்றும் கம்ரூப் உள்பட பல பகுதிகளில் பெரிய அளவிலான வெள்ள அரிப்பு ஏற்பட்டுள்ளது.

சில்சார் நகரம் முழுவதுமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

மாநில முதல்வர் ஹிமந்தா பிஸ்வ சர்மா, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு வருகிறார்.

நாடு முழுவதும் பல்வேறு அமைப்புகள் சார்பிலும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## தேனி, திண்டுக்கல், நீலகிரி உள்ளிட்ட

# 5 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

சென்னை,ஜூன் 30- தமிழகத்தில் தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

1-ம் தேதி முதல் 3ம் தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.